Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :198 வைகாசி 32ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 14 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## தளர்கிறது ஊரடங்கு!

*இனிமேல் நள்ளிரவு12 தொடக்கம் 4 மணிவரை*

கொழும்பு, ஜூன் 14
இன்று முதல் அனைத்து மாவட்டங்களிலும் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 4 17 >

# ஜனாதிபதித் தேர்தல் தவறை இப்போதாவது சரி செய்யுங்கள்

## தமிழர்களுக்கு மஹிந்த அணி அழுத்தம்



கொழும்பு, ஜூன் 14
ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக் ஷவுக்குப்பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களிக்கவில்லை என்பது உண்மை. சிங்கள மக்கள் அள்ளி வழங்கிய வாக்குகளில்தான் கோத்தாபய அமோக வெற்றியடைந்தார். ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் விட வேண்டாம் என தமிழ், முஸ்லிம் மக்களிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பங்காளிக் கட்சியான புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார். 17 >

## தேர்தலுக்கு காசு தாரீர்!

*உதவி கேட்கிறார் விக்கி*

யாழ்ப்பாணம், ஜூன் 14
தேர்தல் செலவுகளுக்கு கைகொடுக்குமாறு தமிழ் மக்களிடம் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் அடக்குமுறைகள், இன அழிப்பு, காட்டிக் கொடுப்புக் 17 >


## தீயில் எரிந்து இளம் பெண் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூன் 14
கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்டிருந்த மோதலால் தனக்குத்தானே தீ மூட்டியதாகத் தெரிவிக்கப்படும் இளம் குடும்பப் பெண் பரி 17 >

## யாழ்ப்பாணத்தில் 8 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரையான காலப் பகுதியில் 8 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 2020ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை கிடைக் 17 >

## பரீட்சார்த்த தேர்தலில் 23 அங்குல வாக்குச்சீட்டு




யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள பரீட்சார்த்த தேர்தலில் 23 அங்குலம் நீளமான வாக்குச் சீட்டே பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்ப 17 >

## பரந்தனில் கடைகள் உடைப்பு

கிளிநொச்சி, ஜூன் 14
பரந்தனிலுள்ள நான்கு கடைகள் உடைத்து, புகைத்தல் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் இந்தத் திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது.
பரந்தன் சந்தைப் பகுதியில் உள்ள சிறிய வர்த்தக நிலைங்களே உடைக் 17 >

## சுமந்திரனால் மட்டும் 20 பேர் அரசியல் கைதிகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 14
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீதான கொலை முயற்சி தொடர்பில் 2017ஆம் ஆண்டு 5 பேரும், தற்போது 15 பேருமாக 20 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 17 >

## 39 கிலோ கஞ்சாவுடன் இளவாலையில் 2பேர் கைது

*கடற்படையினர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 14
மாதகல் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகைச் சோதனை செய்த போது அதிலிருந்து 39 கிலோ கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதாகவும், படகைச் செலுத்திச் சென்ற 2 பேரைக் கைது செய்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ள 17 >

## 'லீசிங்'வாகனங்களை பறிமுதல் செய்யக் கூடாது!

*ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு*

கொழும்பு, ஜூன் 14
தவணைக் கொடுப்பனவைச் செலுத்தாதவர்களின் வாகனங்களை நிதி நிறுவனங்கள், பறிமுதல் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.
தவணைக் கொடுப்பனவை செலுத்தாதவர்களின் வாகனங்கள் பறிமுதல் செய் 17 >

## ஆலயத்தில் திருடியவர் பொலிஸாரால் கைது

கொடிகாமம், ஜூன் 14
வரணி வடக்கில் அமைந்துள்ள கும்பிட்டான்புல பிள்ளையார் ஆலயத்தை உடைத்துத் திருடிய நபர் நேற் 17 >

## இணுவிலிலிருந்து இந்தியா திரும்பியவர் கொரோனா வந்தே மீண்டார்

*வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்*

யாழ்ப்பாணம், ஜூன் 14
இணுவிலிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியவர் கொரோனாத் தொற்று ஏற்பட்டு பின்னரே குணமடைந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவை 17 >

## கொள்ளையன் தாக்கி பெண்ணொருவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 14
சாவகச்சேரி மத்திய பேருந்து நிலையத்துக்கு அண்மையில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையன் அங்கிருந்த பெண்ணைத் தாக்கியதில் அவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச் 17 >

## பீடியால் வந்த வினை இளைஞர் எரிந்து சாவு

சுன்னாகம், ஜூன் 14
பீடியைப் புகைத்துக் கொண்டு நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கியவர், தீக்காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். 17 >

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ 57,000/-
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
011 200 88 88
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பரீட்சார்த்த தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

## உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 14**

**நாவாந்துறையில் இன்று நடைபெறவுள்ள பரீட்சார்த்த தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாவாந்துறை வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வாக்காளர்கள் பரீட்சார்த்த தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர். இன்று காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரையில், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது. வாக்காளர்களுக்கான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே கிராம அலுவலர் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

வாக்காளர்கள் வாக்களிக்க வரும்போது முகமூடி அணிந்து வரவேண்டும், ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் கொண்டுவரவேண்டும், வாக்காளர் அட்டை கொண்டுவரவேண்டும், வாக்களிப்பதற்காக கறுப்பு அல்லது நீலப் பேனை கொண்டு வரவேண்டும்.

வாக்களிப்பு நிலையம் சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நேற்று தொற்று நீக்கம் செய்யப்பட்டது. சமூக இடைவெளியை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேணியவாறு வாக்களிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர்களின் உடல் வெப்பநிலை முதலில் சோதிக்கப்படும். வாக்காளர்கள் அதன் பின்னர் உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடு இடம்பெறும். அதன் பின்னர் கிருமி நீக்கும் திராவகம் ஊடாக கை கழுவுதல் நடைபெறும். அதனையடுத்து வாக்களரின் கையில் தேர்தல் கடமையில் உள்ள அதிகாரிகளின் கைகள் படாதவாறு மை பூசப்படும். அதன் பின்னர் வாக்குச்சீட்டுக் கிழித்துக் கொடுக்கப்படும். வாக்காளர் புள்ளடியிடுவதற்கான கூண்டில் வைத்து அதனை அடையாளமிட்ட பின்னர் வாக்குப் பெட்டியில் போட வேண்டும். உள்நுழைவதற்கு ஒரு வாசலும் வெளியேறுவதற்கு இன்னொரு வாசலும் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளேவரும்போதும் வெளியேறும் போதும் வாக்காளர் கை கழுவ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன, என்றார். (ஓ,5)

## மின்கட்டணத்தை மாநகரசபை பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

இந்தியக் கலாசார மண்டபத்தின் இதுவரை கால மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று யாழ்ப்பாணம் மாநகர சபை பதில் முதல்வர் ரி.ஈசன் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கலாசார மண்டப மின் கட்டணத்தால் சர்ச்சை என்ற செய்தி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. அது தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் அனுப்பியுள்ள கடிதத்திலேயே யாழ்ப்பாணம் மாநகரசபை பதில் முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்துக்கான மின் கட்டணத்தைச் செலுத்த யாழ்ப்பாணம் மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ,5)

# இராணுவ அதிகாரி பல்கலைக்கு துணைவேந்தராக வாய்ப்பில்லை

## கூறுகிறார் ஆணைக்குழுத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு ஒரு இராணுவ அதிகாரியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ துணைவேந்தராக நியமிக்கப்போகிறார் என்ற செய்தியில் உண்மை இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மூத்த பேராசிரியர் சம்பத் அமரதுங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்வேறு உயர் பதவிகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் இராணுவ உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவரும் நிலையில், கடந்த ஒரு வருட காலத்துக்கும் மேலாக வெற்றிடமாகவுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கடந்த 9 ஆம் திகதியுடன் விண்ணப்பங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு இராணுவ அதிகாரியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ துணைவேந்தராக நியமிக்கப் போகிறார் என்று அரசல், புரசலாகச் செய்திகள் வெளிவந்திருந்தது.

இது பற்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் மூத்த பேராசிரியர் சம்பத் அமரதுங்கவிடம் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் வெற்றிடத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்போது மூத்த பேராசிரியர் கந்தசாமி தகுதி வாய்ந்த அதிகாரியாக இருக்கிறார். புதிய துணைவேந்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை அவரே துணைவேந்தராகச் செயற்படுவார்.


இராணுவ அதிகாரி ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப்படப்போகிறார் என்பதில் எந்தவித உண்மையும் இல்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கல்வித் துறை சார்ந்த விடயங்களில் மிகக் கவனமாகவே செயற்படுகிறார். அவர் ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் ஹோமகமவில் அமைந்துள்ள மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் நியைத்திலும், கம்பஹாவில் அமைந்துள்ள களனி பல்கலைக்கழகத்தின் விக்கிரமராச்சி ஆயுர்வேத பயிற்சி நிலையத்திலும் முன்னாள் இராணுவ அதிகாரிகளே தகுதி வாய்ந்த அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். ஜனாதிபதி பதவியேற்றவுடன் அவற்றில் மாற்றங்களைக் கொண்டுவந்தார்.

அதே போலவே, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கும் உயர் கல்வித் தகுதியுடைய சாதாரண குடிமக்களான கல்வியியலாளர்களில் ஒருவரே துணைவேந்தராக வர முடியும். இராணுவ அதிகாரிகள் எவரும் [illegible] வரவே முடியாது. தேர்தல் நெருங்[illegible]யில் இத்தகைய வதந்திகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும், என்றார். (ஓ,5)

## தொகுதிகள் பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் 11 தேர்தல் தொகுதிகளிலும் தேர்தல் பணிகளை இலகுபடுத்தும் நோக்கில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.

காங்கேசன்துறை மற்றும் நல்லூர்த் தொகுதிகள் மாவை. சேனாதிராசா தலைமையிலும், வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.சரவணபவன் தலைமையிலும், யாழ்ப்பாணத் தொகுதி இ.ஆனோல்ட், ஊர்காவற்றுறைத் தொகுதி பா.கஜதீபன், கிளிநொச்சி சி.சிறிதரன், சாவகச்சேரி திருமதி சசிகலா ரவிராஜ், பருத்தித்துறை எம்.ஏ.சுமந்திரன், கோப்பாய் கு.சுரேந்திரன், உடுப்பிட்டி வே. தபேந்திரன், மானிப்பாய் த.சித்தார்த்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுட் டுள்ளனர். (ஓ,5,105)



## பால்மா விலையை அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 14

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை அதிகரிக்க அனுமதிக்குமாறு பால்மா நிறுவனங்கள், நுகர்வோர் அதிகார சபையிடம் கோரியுள்ளன.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளமையால் ஏற்பட்டுள்ள நட்டத்தை தவிர்ப்பதற்காக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இதுவரை பால்மா நிறுவனங்களின் கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளிநொச்சியில் விபத்து மூவர் மருத்துவமனையில்

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த மூவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி ஏ9 வீதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஒரே திசையில் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களே விபத்துக்குள்ளாகின. கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14)

# திருப்பலியின்போது ஆசிநீருக்குத் தடை!

## மன்னார் ஆயர் கண்டிப்பான உத்தரவு மேலும் பல நிபந்தனைகளும் விதிப்பு



மன்னார், ஜூன் 14

கொரோனா பெருந்தொற்றின் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட மக்களுடன் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அரசு அனுமதித்துள்ள நிலையில், திருப்பலியின்போது ஆசிநீரைப் பாவிப்பதற்கு மன்னார் ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை தடைவிதித்துள்ளார்.

மன்னார் மாவட்ட குருக்கள், துறவியர், கத்தோலிக்கர்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார். அந்த அறிக்கையில் திருப்பலியை நிறைவேற்றுவதற்கு மேலும் சில கண்டிப்பான உத்தரவுகளையும் ஆயர் இம்மனுவர் பெர்னாண்டோ ஆண்டகை பிறப்பித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனாத் தொற்றின் பின்னர் நிலைமை ஓரளவு கட்டுக்குள் வந்து மீண்டும் வழிபாடுகளை நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளமைக்கு அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். மன்னார் மாவட்டத்தில் குருக்கள், துறவியர், பொதுமக்கள் ஆகியோர் வழிபாட்டின்போது சமூக விலகல் உள்ளிட்ட சில நடைமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

இதன்படி, ஆலயங்களுக்கு உட்பிரவேசிக்கும் முன் ஒவ்வொருவரும் சவர்க்காரங்களை இட்டு கைகளை கழுவி சுத்தம் செய்துகொள்ள வேண்டும். ஆலயங்களுக்குள் இருக்கும் முழு நேரமும், முகக்கவசம் அணிந்திருத்தல் அவசியம். தூய நற்கருணை பெறும் நேரத்தில் மாத்திரம் அதை களைந்து அதன் பிறகு அதனை மீளவும் அணிந்து கொள்ளல் வேண்டும். திவ்விய நற்கருணை வழமைபோல் வழங்கப்படலாம். எவராவது கைகளில் திவ்விய நற்கருணையை பெற விரும்பினால் அதை அவர்கள் தகுந்த மரியாதையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

மக்கள் ஆலயங்களுக்குள் வந்து தனித்தனியாக செபிக்கக்கூடியதாக ஆலயங்கள் திறந்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் இடையில் தகுந்த சமூக இடைவெளியானது பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும். அன்பியங்களின் ஊடாக ஒரு திருப்பலிக்கு 50க்கும் குறைவுபட்ட மக்கள் இருக்கும் வகையில் ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும். ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கலாம். இப்படியான ஒரு சூழ்நிலையிலே கத்தோலிக்க இறைமக்கள் கட்டாயமாக ஞாயிறு திருப்பலிகளில்தான் பங்குகொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதை அவர்கள் இவ்வளவு காலமும் தொலைக்காட்சி, இணையத்தளங்கள் ஊடாக நிறைவேற்றிய விதத்தில் தொடர வேண்டும்.

இக்கால கட்டத்தில் பொதுவாக ஆசிநீர் பாவனையை தவிர்த்துக்கொள்ள வேண்டும். 50க்கும் குறைவுபட்ட மக்கள் கூட்டத்துடன் அன்பிய வழிபாடுகளை ஒவ்வொருவருக்கும் இடையிலான தூரத்தைப் பேணி நடத்தலாம்- என்றுள்ளது. (ம-56)



## அடம்பனில் சிறப்பாக நடந்தேறியது புனித அந்தோனியார் ஆலய விழா!

மன்னார், ஜூன் 14

மன்னார் மறைமாவட்டத்தின் அடம்பன் நெடுங்கண்டலில் புனித அந்தோனியாரின் ஆலய பெருவிழா நேற்றுச் சனிக்கிழமை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பங்குத் தந்தை அருட்பணி தி.நவரட்ணம் அடிகளாரின் ஒழுங்கமைப்பின் கீழ், மடு மறைக்கோட்ட முதல்வரும் ஆட்காட்டிவெளி பங்குத் தந்தையுமான அருட்பணி ச.சத்தியராஜ் அடிகளார் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

திருப்பலியைத் தொடர்ந்து சமூக இடைவெளியைப் பேணிய வகையில் திருச்சொரூபப் பவனியும் இடம்பெற்றது. (ம-213)



## இறம்பைக்குளத்தில் அந்தோனியார் விழா

வவுனியா, ஜூன் 14

வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுத் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ அடிகளாரின் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சமூக இடைவெளியைப் பேணிய வகையில் திருவிழாத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. (ம-110)

## சங்கிலிய மன்னனின் நினைவு வவு. கற்குளத்தில் கடைப்பிடிப்பு


வவுனியா, ஜூன் 14

சங்கிலிய மன்னனின் 401ஆவது நினைவுதினம் வவுனியா கற்குளம் பகுதியில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

கற்குளம் பகுதியில் அமைந்துள்ள ஆற்றுப்பகுதியில் சங்கிலிய மன்னனுக்கான பிதிர்கடன் நிகழ்வுகள் சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றதுடன், அதன்பின்னர் சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆலய வளாகத்தில் அவருக்கான அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது சங்கிலிய மன்னனின் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு, நினைவுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதுடன், மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அவரது நினைவாக வறிய குடும்பங்களைச் சேர்ந்த 5 பேருக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. சிவசேனை அமைப்பு இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது. (ம-110)







## கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது

கிளிநொச்சி, ஜூன் 14

இராமநாதபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரின் உடைமையில் இருந்த கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து விரைந்து செயற்பட்ட அவர்கள் குறித்த பெண்ணைக் கைது செய்தனர். அவரிடம் இருந்து 6 போத்தல் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்கு சாத்தியம்



கொழும்பு, ஜூன் 14
மேல், வடமேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு முழுவதும் முக்கியமாக மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (எ-ரி2)

# 3 நாள்கள் டெங்குக் கட்டுப்பாடு 983 இடங்களில் களத் தரிசிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14



உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்று நாள் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது 983 இடங்களில் களத்தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளில் 145 இடங்களில் சிவப்பு எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதுடன் டெங்கு நுளம்பு பெருக்கெடுக்கும் சூழலில் கடும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இடங்களை வைத்திருந்த 5 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
சிவப்பு எச்சரிக்கை செய்துள்ள 145 இடங்களிலும் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர் ஆகியோரால் மீள் பரிசோதனைகள் இடம்பெற்று விழிப்புணர்வு செய்யப்படுகின்றது. தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தில் கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை ஜே/203 ஏழாலை தெற்கிலும், 9ஆம்திகதி செவ்வாய்க்கிழமை ஜே/209 ஈவினையிலும், 10ஆம்திகதி புதன்கிழமை ஜே/195 சுன்னாகம் வடக்கிலும், களத்தரிசிப்புக்கள் இடம்பெற்றன. மேலும் 12 ஆம் திகதி உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் உடுவில் ஆலடி ரான்ஸ்போமர் வீதியில் பொது மக்களின் உதவியுடன் சிரமதான வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது - என்றனர். (ப-39)

# ஐ.ம.ச கட்சியை ஆரம்பித்த சஜித்தின் நோக்கம் தோல்வி

*முன்னாள் எம்.பி. செஹான் சேமசிங்க தெரிவிப்பு*



கொழும்பு, ஜூன் 14
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை போன்று அரசியலில் முன்னேறலாம் என்ற நோக்கத்திலேயே முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார். ஆனால் இவரது நோக்கம் இன்று தோல்வியடைந்துள்ளது. எதிர்த் தரப்பின் பல உறுப்பினர்கள் பொதுத்தேர்தலைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்வார்கள். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்தோம். அரசியல் ரீதியில் எமது நோக்கங்கள் ஒருமித்ததாகக் காணப்பட்டது. இதன் காரணமாகவே மக்கள் மீண்டும் ஆட்சியதிகாரத்தை எம்மிடம் ஒப்படைத்தார்கள். எமது வழிமுறையைப் பின்பற்றியே முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார். ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சிக்கு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொறுப்புக் கூற வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஒன்றும் தற்போது பலம் பெறவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத்தாக்கல் செய்த மூவர் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து சுயமாகவே விலகிக் கொண்டார்கள். முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொண்டுள்ளார். இவரது தீர்மானத்தின் பின்னணியில் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளார். என்ற விடயம் அனைவரும் அறிந்ததே. பொதுத்தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இவருக்கு முக்கிய பதவி வழங்கப்படும். பொதுத்தேர்தலில் ஆளும் தரப்புடன் போட்டியிடுவதற்குப் பலமான எதிர்க்கட்சி ஒன்று தற்போது கிடையாது. மூன்றில் இரண்டுக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று எம்மால் பலமான அரசாங்கத்தை அமைக்க முடியும் என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது -என்றார். (ப)

# நேரம் தவறும் பேருந்துகளின் சாரதிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 14
கொழும்பு மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பேருந்துகள் குறித்த நேரத்திற்குள் அல்லது அதற்கு மேலதிக நேரத்தில் பயணத்தை நிறைவு செய்கிறதா என்பதை ஆராய்ந்து அவ்வாறான பேருந்துச் சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் செயற்பாடு ஒன்று நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பெலலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் அறிவுறுத்தல்களுக்கு அமைய குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 267 இடங்களுக்கு செல்லும் பேருந்துகளின் நடவடிக்கைகள் குறித்து 22 பேருந்து தரிப்பிடங்களில் இருந்து க்ண்காணிக்கப்பட்டது. இதன்போது 119 பேருந்துகள் குறித்த நேரத்துக்குள் பயணித்துள்ளதாகவும் 55 பேருந்துகள் கால தாமதமாகப் பயணித்ததாகவும் மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் தெரிவித்துள்ளது.
இதன்போது தாமதமாகப் பயணித்த பேருந்துச் சாரதிகள் அறிவுறுத்தப்பட்டனர். குறித்த செயற்பாடு காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
கொழும்பு அவசர அழைப்பு பிரிவு மற்றும் பிரதேச வலயப் போக்குவரத்துப் பிரிவினரும் இணைந்து குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ப)

# பொதுச்சுகாதார உத்தியோகத்தர் வெற்றிடத்தால் பணி நெருக்கடி

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் 8 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டிய நிலையில், 4 பேர் மட்டுமே பணிபுரிவதால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளமை தொடர்பில் மாகாண ஆளுநருக்கு அவசர கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 96 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் பணியாற்ற வேண்டும். மாவட்டம்முழுமையாக 89 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் உள்ளனர். அந்த வகையில் மாவட்டம் முழுமையாக 7 வெற்றிடங்கள் உள்ள நிலையில், 4 வெற்றிடங்கள் மாவட்டத்தின் பிரதான மாநகரப் பகுதியில் காணப்படுகின்றது.
6 ஆயிரம் தொடக்கம் 7 ஆயிரம் பேருக்கு ஒரு சுகாதார உத்தியோகத்தர் என்ற நிலையில் மாநகர சபை எல்லைக்குள் 80 ஆயிரம் பேருக்கு 4 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களே பணியாற்றுகின்றனர்.
இந்த நிலைமைகள் அனைத்தையும் நன்கு அறிந்துள்ள மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையினர், இந்த ஆண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கிடைத்த 13 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களில் ஒருவரைக் கூட யாழ்ப்பாணம் மாநகர சபைக்குநியமிக்காதுஏனைய இடங்களுக்கு நியமித்துள்ளனர்.
எனவே இதனை உடன் கவனத்தில்கொண்டுஆவனசெய்யுமாறு கோரப்பட்டுள்ளது.
இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது , யாழ்ப்பாணத்தில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. அதே நேரம் புதிதாக நியமனம் பெறுபவர்களை உள்ளூராட்சிமன்றங்களுக்குவழங்க முடியாது. வருடாந்தஇடமாற்ற உத்தியோகத்தர்களும் கிடைக்கவில்லை. இருப்பினும் பிற மாவட்டத்தில் நீண்ட காலம் பணியாற்றிய 12 பேரே யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு இணைக்கப்பட்டனர். இருப்பினும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரியின் கோரிக்கையின் பெயரில் 4 உத்தியோகத்தர்களை தற்காலிகமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரம் நிரந்தரமாக வழங்கவும் விண்ணப்பம் கோரப்படும் - என்றார். (சு-105)

# புதுக்குடியிருப்பு மயானம் சபையிடம் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 14
புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்றவர்களுடைய நிதிப் பங்களிப்பில் புனரமைப்பு செய்யப்பட்ட இந்து மயானம் உத்தியோகபூர்வமாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் மயாணம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.
மயானத்தின் ஆவணங்களை மன்னார் மாவட்ட மேலதிக செயலர் சி.குணபாலன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.சத்தியரூபன் ஆகியோர் கையளிக்க, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா பிறேமகாந், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ச.கிரிசாந்தன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்
அதனைத் தொடர்ந்து இந்து மயானத்துக்குச் சென்ற உத்தியோகத்தர்கள் மயானத்தின் சாவியை பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் ஆகியோரிடம் ஒப்படைத்தனர். (சு-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாருக்காக ஊரடங்கு?

ஊரடங்கு நேரத்தை இன்னும் தளர்வுக்கு கொண்டு வந்திருக்கிறது அரசு. இதுவரை தினமும் இரவு 11 மணி முதல் நடைமுறைக்கு வந்த ஊரடங்கு இனிமேல் நள்ளிரவு 12 முதல் அதிகாலை 4 மணிவரை மட்டுமே அமுலில் இருக்கும். ஊரடங்கைத் தளர்த்தி இயல்பு வாழ்வுக்கான நிலையை இன்னும் உறுதிப்படுத்துவது நல்லதுதான். ஆனால் நள்ளிரவு 12 மணி முதல் விடிகாலை 4 மணி வரை எதற்காக ஊரடங்கு போடப்படுகின்றது என்ற விளக்கத்தை அரசு தெரிவிக்கவேயில்லை.

பொதுவாகவே இரவில் 10,11 மணிக்குப் பின்னர் பெரும்பாலானோர் அவசர தேவை எதுவுமின்றி வெளிவருவதில்லை. இரவு விடுதிகள், மதுபானக் கொண்டாட்டங்கள், விழாக்கள் என்பவற்றுக்காக சிலர் நள்ளிரவிலும் நடமாடுவதுண்டு. அத்தகைய எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஏற்கனவே தடை இருப்பதால், இப்போதெல்லாம் 9 மணியுடனேயே முழு இலங்கையும் உறக்கத்துக்குள் புகுந்து விடுகின்றது. அப்படிப்பட்ட நிலையில் எதற்காக 12 மணியில் இருந்து 4 மணிவரை ஊரடங்கு? . ஆளே இல்லாத கடையில் ரீ ஆற்றுவது போல, ஆளே இல்லாத நேரத்தில் இந்த நள்ளிரவு 4 மணித்தியால ஊரடங்கு எதற்காகப் போடப்படுகின்றது என்ற புரிதல் எவருக்கும் இல்லை. அவ்வளவு ஏன், இப்படி ஊரடங்கை போட்டு, இப்போது தளர்த்திக் கொண்டிருக்கும் அரசுக்கு கூட நள்ளிரவில் இருந்து 4 மணி வரை எதற்காக ஊரடங்கை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற தெளிவு இருக்கப்போவதில்லை. மக்களை கொரோனா தொற்றாதிருக்கவே இந்த ஏற்பாடு என அரசு சொல்லுமாக இருப்பின் அதைவிட பகிடி வேறுகிடையாது. நள்ளிரவில் பேய்கள் நடமாடும் என்ற புனைவு மக்களிடம் உண்டு. ஒருவேளை பேய்களுக்கு கொரோனா தொற்றக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் அரசு இப்படி ஊரடங்கை நள்ளிரவில் நடைமுறைக்கு கொண்டு வருகின்றதோ தெரியவில்லை.

கொரோனாவால் முழு நாடும் முடக்கப்பட்டதால் இலங்கையின் வாழ்வியல் கோலமே அடியோடு மாறிப்போய் விட்டது. அதிலும் குறிப்பாக பொருளாதாரம், போக்குவரத்து என்பன மரண அடி வாங்கியிருக்கின்றன. இலங்கைக்குள்ளான போக்குவரத்தை சீர் செய்தல் என்பது இப்போது அரசுக்கு முன்னுள்ள அத்தியாவசிய கடமையாகும். நாட்டின் சகல பகுதிகளுக்கும் தமக்குச் சௌகரியமான நேரத்தில் செல்வதற்கான நிலை இதனால் ஏற்படும். தூர இடங்களுக்குப் பயணிப்பவர்கள் பகல் முழுதும் பணிக்குச் சென்றுவிட்டு, ஆசுவாசமாக இரவிலேயே செல்வார்கள். வழக்கமாக அவர்கள் உறக்கத்துக்காகச் செலவிடும் நேரத்தை பயணத்துக்குச் செலவிட்டு, பகல்நேரப் பொழுதை பயனுள்ளதாக்க முடியும். உதாரணமாக இரவில் கொழும்புக்குச் செல்லும் ஒருவர் அதிகாலையிலேயே அங்கு இறங்கக் கூடியதாக இருக்கும், அதன் பின்னர் அவர் தன்னுடைய இயற்கைக்கடன்களை முடித்துவிட்டு, அடையாள அட்டை, கடவுச்சீட்டு, நேர்முகத்தேர்வு போன்றவற்றை அன்றைய பகலிலேயே முடித்துக் கொண்டு, அன்றிரவே பஸ் ஏறினால் மீண்டும் விடிகாலையில் வீட்டுக்கு வந்துவிடலாம்.

ஆனால் இப்போது அப்படியல்ல. பகலிலேயே பயணப்பட்டு, இரவில் கொழும்பில் தங்கி நின்று, அடுத்தநாள் பகலில் போன வேலையை முடித்து, அதற்கடுத்த பகல் வேளையே மீண்டும் சொந்த இடத்துக்குப் புறப்பட முடியும். ஒருநாளில் செய்யவேண்டிய வேலைக்கு மூன்று நாள்கள் விரயமாக்க வேண்டியுள்ளது. இவ்வளவு நாளும் இரவு 10 மணி, 11 மணி என்று ஊரடங்குச் சட்டத்தைக் கொண்டுவந்ததால் கொழும்பு முதலான தூர இடங்களுக்கு இரவுநேரத்தில் போக்குவரத்துச் சேவை நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது நள்ளிரவு முதல் ஊரடங்கு போடப்பட்டாலும் அதே கதைதான். அத்தோடு எல்லோரும் தூங்கச் சென்ற பின்னர் ஊரடங்கு போட்டாலும் ஒன்றுதான், போடாவிட்டாலும் ஒன்றுதான். அதேசமயம் நள்ளிரவு நேர ஊரடங்கும் இல்லாமல் போனால் கொழும்பு போன்ற தூர இடங்களுக்கான போக்குவரத்து மீண்டும் இரவில் களைகட்டும். இதன் மூலம் 2 நாள்களையும், அந்த இரு நாள்களும் தங்குமிடம், உணவு என்பவற்றுக்கு ஏற்படும் அநாவசியச் செலவீனங்களையும் மீதப்படுத்த முடியும். இப்படி மீதப்படுத்துவத்ன் மூலம் பொருளாதாரத்துக்கு பலம் உண்டாகும். அதைவிட இலங்கைக்குள்ளான பொருள்களையும் இலகுவாக வேறு இடங்களுக்கு அனுப்பி சந்தைவாய்ப்புக்களை இன்னும் பெருக்கிக் கொள்ள முடியும். தவிர, ஏற்றுமதி, இறக்குமதி என்பவற்றுக்கான விநியோக சேவை உள்ளிட்ட பல விடயங்களை நள்ளிரவு ஊரடங்கு இல்லாவிட்டால் சாதிக்கமுடியும். அதனால் வெளிப்பார்வைக்காக போடப்படும் ஊரடங்கு நாடகத்தை முடிவுக்கு கொண்டுவந்து, மக்களின் போக்குவரத்தை இலகுவாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# ஜனாதிபதித் தேர்தலின் போதும் ரணில் அணியே காலைவாரியது



கொழும்பு, ஜூன் 14

ரணில் அணி காலைவாரியதாலேயே ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவால் வெற்றி பெறமுடியாமல்போனது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலை முன்னிட்டு நுவரெலியாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கட்சிக் கருத்தரங்கில் பங்கேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் தற்போது யானைக் கூட்டணியில் இல்லை. இருந்தும் மலையக மக்கள் யானைக்கே வாக்களிப்பார்கள் என சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அந்த யுகம் மலையேறிவிட்டது. கடந்த காலங்களில் எமது மக்கள் அன்னத்துக்கு வாக்களிக்கவில்லையா? எமது மக்கள் யானையை மறந்துவிட்டனர். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் அணியினர் ஒழுங்காகச் செயற்பட்டிருந்தால் சஜித் பிரேமதாச வெற்றிபெற்றிருப்பார். இழுபறி நிலை தொடர்ந்ததாலேயே வெற்றிபெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஒப்புதலுடனேயே ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். எனினும், மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கான சூழ்நிலை எமக்கு உருவாகியுள்ளது. அதில் மலையக மக்களின் பங்களிப்பும் மிக முக்கியம். எனவே, வாய்ப்பை உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார். (ப-44)

# சுற்றுலாத்துறை பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஜூன் 14

சுற்றுலாத்துறைச் சேவையை மீள் கட்டியெழுப்பவும், பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறைச் சேவையாளர்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றி சுற்றுலாத்துறைச் சேவையை பயனுடையதாக முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

கொவிட்- 19 வைரஸ் பரவல் தாக்கத்தின் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறையை மீள் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

சுற்றுலாப் பயணிகளுக்கான வீசாக் கட்டணம், உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை சேவை வழங்கல், வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகை தரும் போதும், சுற்றுலா மையங்களைப் பார்வையிடும் போதும் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டன.

சுற்றுலாத்துறைச் சேவையில் ஈடுபடும் நிறுவனங்கள் கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் அறிவுறுத்தியுள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கடுமையாகப் பின்பற்றவேண்டும். வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை சேவையை துரிதமாகக் கட்டியெழுப்புவது பிரதான இலக்கு.

சுற்றுலாப் பயணிகளின் வீசாக் கட்டணத்தை 35 டொலருக்குள் வைத்துக்கொள்வது, அந்தத் துறையை துரிதமாக கட்டியெழுப்புதல், சேவையில் ஈடுப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன- என்றுள்ளது. (ப)

# கொரோனாத் தொற்று பரவ வாய்ப்புள்ளது

*தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு*

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் வழமை நிலை திரும்பியிருப்பதால் பொதுமக்களின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுவதால் வைரஸ் தொற்று பரவ வாய்ப்புள்ளது என்று தொற்றுநோய் விஞ்ஞான ஆய்வு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுஹத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு கடந்த 8 ஆம் திகதி முதல் விலக்கப்பட்டது. இந்நிலையில் பொதுமக்கள் மத்தியில் இருந்து கொவிட் 19 வைரஸ் தொற்று பரவலடையக் கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே பொதுமக்கள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டும் - என்றார். (ஐ)

# மாலைதீவிலிருந்து 291 பேர் திரும்பினர்

கொழும்பு,ஜூன் 14

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மாலைதீவில் தங்கியிருந்த 291 இலங்கையர்கள் நேற்றுச் சனிக்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானம் ஒன்றின் மூலமே இவர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

291 பேரும் பீ.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டதன் பின்னர் விமான நிலையத்துக்கு அருகாமையில் உள்ள 4 உல்லாச விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 14

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை திங்கட்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் கடற்படைமுகாமிலும், வவுனியா மாவட்டத்தில் பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிகுளம் கிராமம், கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் ஓலைத்தொடுவாய், முள்ளிப்பழம்,தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், தரவன் கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் அடையாள அட்டைகள் கிழமை நாள்களிலா விநியோகம்?

## மேலதிக கொடுப்பனவு வழங்கப்படாததை அடுத்து அஞ்சல் அலுவலர்கள் இவ்வாறு போர்க்கொடி

**யாழ்ப்பாணம், ஜூன் 14**

**நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இம்முறை தேர்தலுக்கான வாக்காளர் பதிவு அட்டைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விநியோகிக்கப்படுவதில் பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.**

அஞ்சல் ஊழியர்களுக்கு சனிக்கிழமைகளில் வழங்கப்பட்டுவந்த மேலதிக நேரக்கொடுப் பனவுகள் அண்மையில் அரசால் நிறுத் தப்பட்டன. பணப் பற்றாக்குறை காரணமாக அஞ்சல் ஊழியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்க முடியாதுள்ளது என்று அரசால் தெரிவிக்கப்பட்டது. இதைய டுத்து பிரதி சனிக்கிழமைகளில் அஞ்சல் அலு வலகங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் வாக்காளர் அட்டை கள் சனிக்கிழமைகளில் விநியோகிப்பது தொடர்பில் பெரும் சிக்கல் நிலை தோன்றியுள் ளது. இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்க ளில் சனிக்கிழமைகளிலும் வாக்காளர் அட் டைகள் வழங்கப்பட்டன. இம்முறை மேலதிகக் கொடுப்பனவு கோரி அவர்கள் சனிக்கிழமை களில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டால் வாக் காளர் அட்டைகளை விநியோகிப்பதில் தாம தங்கள் ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்ப டுகின்றது.

எனினும் சில தபாலகங்கள் நேற்றுச் சனிக்கி ழமை திறந்திருந்தன. அரசுக்கு அவகாசம் வழங்கும் வகையில் தபாலகங்கள் திறக்கப் பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## குருதிக்கொடை முகாம் இன்று!

யாழ்ப்பாணம், ஜூன் 14

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட் டத்துடன் கூவில் சிவா னந்தா சனசமூக நிலை யம் இணைந்து நடத் தும் குருதிக்கொடை முகாம் இன்று இடம் பெறவுள்ளது.

கீரிமலை கூவில் சிவா னந்தா சனசமூக நிலை யத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 3.30 மணி வரையில் இந்தக் குருதிக்கொடை இடம்பெறவுள்ளது. விரும்பியவர்கள் குரு திக்கொடையை மேற் கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (ம)


## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

புத்தளம், ஜூன் 14

புத்தளம் மரிக்கார் வீதி யில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் காயமுற்றவர் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளம் மஸ்ஜித் வீதி யைச் சேர்ந்த கஸ் ஸாலி முஹம்மது துவாரிக் (வயது 52) என்பவரே உயிரிழந்த வராவார். குறித்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிள், வேகக் கட் டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் உள்ள பாதுகாப்பு மதில் மீது மோதி விபத்துக்குள் ளானது.

விபத்துக்குள்ளானவர் புத்தளம் தள மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந் தார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)





## கிளிநொச்சியிலும் சங்கிலியனின் நினைவுதினம் கடைப்பிடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 14

யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்ன னான சங்கிலிய மன்னனின் 401ஆவது ஆண்டு நினைவு தினம் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட சிவசேனை அமைப்பி னரின் ஒழுங்குபடுத்தலில் வரலாற்று சிறப்பு மிக்க சோழர் காலத்திற்குரிய சிவன் ஆலய மான உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் சிவ கங்கை தீர்த்தக்கரையில் சங்கிலிய மன்னனுக்கு விசேட ஆத்ம சாந் திக் கிரியைகள் நடைபெற்றன. (ம-214)



## அப்ரிடிக்கு கொரோனா

இஸ்லாமாபாத், ஜூன் 14

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் மிகச் சிறந்த சகலதுறை வீரரு மான சயிட் அப்ரிடி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தனது சமூக வலைத்தளங்களில் தான் கொரோ னாவால் பாதிக்கப்பட்டுள்ளமையை உறுதிப்ப டுத்தியுள்ளார் அப்ரிடி. 'கடந்த வியாழக்கிழமை முதல் உடல் சோர்வை உணர்ந்தேன். சோதித் துப் பார்த்ததில் கொரோனாவால் நான் பாதிக் கப்பட்டுள்ளமை தெரியவந்தது' என்று அப்ரிடி தெரிவித்துள்ளார். அவருக்கு சனத் ஜெயசூரிய உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் பலரும் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். (ம)

## மாணவி தாக்கப்பட்ட விவகாரத்தில் மூவருக்கு விளக்கமறியல் உத்தரவு

சாவகச்சேரி, ஜூன் 14

நுணாவில் மத்தி பகுதியில் கடந்தவியாழக்கிழமை 16வயது மாணவியொருவர் தாக்கப் பட்ட சம்பவம் தொடர்பாக மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றத்தால் நேற்றுமுன்தி னம் உத்தரவிடப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை மாலை நுணாவில் மத்தி பகு தியில் 16 வயதுச் சிறுமி கூரான ஆயுதத்தினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இரவு இருபகுதியினருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் காயம டைந்த பெண் உட்பட நால்வர் சாவகச்சேரி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்ட சாவகச்சேரி பொலி ஸார் சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் என மருத்துவம னையில் சிகிச்சை பெறும் மூவருக்கு எதிராக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அந்த அறிக்கையின் பிரகா ரம் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-9)

## சமுர்த்திக் கடன்களை மீளச் செலுத்துவதற்கு சலுகைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கொரோனா பெருந்தொற்றை அடுத்து ஏற்பட்ட பொருளா தார நெருக்கடி காரணமாக, சமுர்த்தி வங்கிகளில் வாழ்வா தாரங்கள் மற்றும் குடும்ப அபிவிருத்திக்காகப் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவ தற்கான சலுகைக் காலம், வட்டி மற்றும் தண்டப் பணம் செலுத்துதல் தொடர்பில் சலு கைகள் வழங்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது. சமுர்த்தி அபி விருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதி பதி ஆர்.பி.பீ.திலக்கசிறி இந் தச் சலுகைகள் தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி வங்கிகளுக்கும் சுற் றறிக்கை அனுப்பி வைத்துள் ளார்.

தற்போதுள்ள கொரோனா நெருக்கடி காரணமாக சமுர்த்தி வங்கி அங்கத்தவர் கள் பொருளாதார நடவடிக்கை களை வழமை போன்று நடத் திச்செல்ல முடியாது திணறு கின்றனர். அவர்களது வரு மான வழிகள் தடைப்பட்டுள் ளன. ஆகையினால் சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்கத்தின் மூலம் பெற்றுக் கொண்ட கடன் தொகையினை மாதாந் தம் செலுத்தும்போது ஏற் பட்ட பணக் கஷ்டங்களுக்கு நிவாரணம் ஒன்றினை வழங்குவதே இந்த முன்னெ டுப்பின் முக்கிய அம்சமா கும். இதன்படி, கடன் வழங்க வேண்டியவர்களுக்கு கூடுத லான கால அவகாசத்தை வழங்குவதுடன், பொருத்தமா னவர்களுக்கு வட்டி வீதத்தைக் குறைக்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மீது நம்பிக்கை வைத்த தமிழரை ஒருபோதும் மறவேன்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 14**

**என்மீது நம்பிக்கை வைத்தே ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் எனக்கு வாக்களித்தனர். எனது வெற்றியில் தமிழ் மக்களின் பங்களிப்பு அதிகமாகும். அதனை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



இதேவேளை, மத்திய வங்கி பிணைமுறி ஊழலை விசாரிக்கவும் அர்ஜுன மகேந்திரனை கைதுசெய்யவும் நான் எடுத்த முயற்சியே நல்லாட்சி அரசாங்கம் பிளவுபடக் காரணமாக அமைந்தது. அர்ஜுன மகேந்திரனை கைது செய்ய நான் எடுத்த முயற்சி அதிகாரத்தில் இருந்த சிலருக்கு பிடிக்கவில்லை. எனது ஆட்சியை உருவாக்க தமிழ் மக்கள் வழங்கிய பங்களிப்பே அதிகம் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நாட்டின் கட்டாய தேவையாக இருந்தது. அதுவரை நாட்டில் நிலவிய மிக மோசமான செயற்பாடுகள், அதிகார அடக்குமுறைகள் என்பவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்பதற்காக நான் தலைமையேற்கத் தீர்மானித்தேன். கடந்த 2015 ஆம் ஆண்டில் மக்கள் என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்த பின்னர் நாட்டில் ஜனநாயகத்தை முழுமையாகச் செயற்படுத்த என்னாலான சகல நடவடிக்கைகளையும் நான் முன்னெடுத்துள்ளேன் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அதுமட்டும் அல்லாது நிறைவேற்று அதிகாரத்தைஅதிகமாகவேகையாண்ட தலை வரும் நானேயாவேன். இந்த நாட்டில் எந்தவொரு அரச தலைவரும் முன்னெடுக்காத தைரியமான வேலைத்திட்டங்களை நான் எனது ஆட்சிக்காலத்தில் முன்னெடுத்தேன். நான் செயற்பட்டதை போல வேறு எந்தத் தலைவரும் செயற்பட்டிருக்க மாட்டார்கள்.

இலங்கையின் எந்த ஜனாதிபதி தனது அரசாங்கத்தில் இருந்த பிரதமரை நீக்கிவிட்டு தேர்தலில் போட்டியிட்டு தோற்ற ஒருவரை மீண்டும் பிரதமராக்கியுள்ளார்? அப்போது பிரதமராகச் செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கினேன். இவ்வாறான தீர்மானங்களை வேறு எந்தவொரு ஜனாதிபதியாவது முன்னெடுத்துள்ளனரா. ஆகவே நான் ஏனைய ஜனாதிபதிகள் போல் அல்லாது தைரியமாகச் செயற்பட்ட நபர். இந்த நாட்டில் எனது நல்லாட்சி அரசாங்கத்தில் போன்று சுதந்திரம் வேறு எந்த ஆட்சியாளர்களும் வழங்கியிருக்க முடியாது. நான் வழங்கிய சுதந்திரத்தை கொண்டே ஊடகங்கள் என்னைத் தாக்கின. இன்றும் விமர்சித்தே வருகின்றன.

ஆனால் நான் அதனைக்கண்டு கவலைப்படவில்லை. ஊடக சுதந்திரமும் ஜனநாயகமும் என்னால் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நான் வழங்கிய சுதந்திரத்தை நானே விமர்சிக்க விரும்பவில்லை. என்னை விமர்சிக்கும் அனைவருக்கும் நான் கூறுவது ஒன்றுதான். நீங்கள் அனைவரும் இன்று என்னை விமர்சித்து கேலி செய்யும் சுதந்திரம் என்னால் வழங்கப்பட்டது என்பதை மறந்துவிட வேண்டாம் -என்றார். (ப)

# அரசின் தந்திரோபாயத்தை எதிர்க்க ஒன்றிணையுங்கள்

## தமிழ், முஸ்லிம் மக்களுக்கு தமிழர் மரபுரிமை பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

இன்னொரு தந்திரோபாயத்தைச் சிங்கள அரசு ஈழத் தமிழர் மீதும், முஸ்லிம்கள் மீதும் கட்டவிழ்த்திருக்கின்ற நிலையில், வரலாற்றுத் தவறுகளுக்கு மீண்டும் இடமளிக்காது, இதற்கு எதிராகக் கூட்டாக ஒன்றிணைந்து போராடவேண்டும் என்று தமிழர் மரபுரிமைப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கிழக்கில் தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக 11 பேர் கொண்ட செயலணியை கடந்த ஆனி 2ம் திகதி நியமித்திருக்கின்றார். முற்றுமுழுதாகப் பெரும்பான்மையினரைக் கொண்டமைக்கப்பட்ட இந்தச் செயலணி சிறி லங்காவின் பல்லினத்தன்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இந்தச் செயலணி நியமன விவகாரத்தை, சிங்கள அரசின் சிங்களபௌத்தமயமாக்கல் அரசியல் நிகழ்ச்சி நிரலின் நீட்சியாகவே நோக்கவேண்டியுள்ளது.

ஈழத் தமிழர்களின் பாரம்பரிய தாயக பூமியான வடக்கு, கிழக்கைத் துண்டாடி, தமிழ்த் தேச தாயகக் கோட்பாட்டைச் சிதைக்கும் அரசியல் செயற்பாடுகளை ஏற்கனவே சிங்கள அரசு ஆரம்பித்து, காலம் காலமாக வெவ்வேறு உத்திகளைப் பயன்படுத்தி தமிழர் நிலத்தை அபகரித்து வருகின்றது. தமிழர் நிலத்தை அபகரிப்பது மட்டுமல்லாது தமிழர் மரபுரிமைகளை அழித்து திரிபுபடுத்தி சிங்களபௌத்த வரலாற்றை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவது எமக்குத் தெரியாததல்ல.

முன்னர் வெவ்வேறு அரச நிறுவனங்களுக்கூடு மிகவும் பவ்வியமாகவும், நாசூக்காகவும் நடந்தவைகளுக்கு தற்போது ஜனாதிபதி செயலணி நியமன மூலம் நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் பதவியேற்ற புதிய அரசு சிங்களபௌத்த அடையாளத்தை சிறிலங்காவின் அடையாளமாக ஊக்குவிப்பதில் தீவிர அடிப்படைவாதத்தை அகவயப்படுத்தி பெரும்பான்மை ஜனநாயகப் பொறிமுறையைக் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றது. ஈழத்தமிழர்களின் தாயகக்கோட்பாட்டை தேசநீக்கம் செய்வதில் தொல்லியல் திணைக்களத்தினதும், வனப் பரிபாலனத் திணைக்களத்தினதும் பங்களிப்பு முக்கியமாக இருக்கின்து. தற்போது அமைக்கப்பட்டுள்ள செயலணியின் அதிகார வரம்பு சிங்களபௌத்த மயமாக்கல் செயற்றிட்டங்களை மிகத் தீவிரப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஈழத்தமிழ் பௌத்தம் வடக்கு, கிழக்கில் இருந்ததற்கான வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்றபோதும், ஈழத்தமிழ் பௌத்த வரலாற்று, தொல்லியல் எச்சங்களை வெறுமனே சிங்களபௌத்த வரலாற்று எச்சங்களாக மாற்ற முனைவது சிங்களபௌத்த தேசியவாதத்தின் அடிப்டைக் கோரிக்கைகளை வலுவூட்டுவதாக அமையும்.

சிங்களபௌத்த பூர்வீகத்தின் இருப்பையும் தொல்லியலையும் சிங்களபௌத்தத்தின் வரலாற்று எச்சங்களாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் ஈழத்தமிழரின் இருப்பின் தேசத்துக்கான அடையாளங்களை வரலாற்று மலினம் செய்ய சிங்கள அரசு முனைகின்றது. கேள்விக்குள்ளாக்கும் தமிழ், முஸ்லிம் உறவைப் பலமாக மீளக் கட்டியெழுப்புவதன் மூலம் தான் சிங்களபௌத்த ஏகாதிபத்திய தேசியவாதத்துக்கெதிரான எதிர்ப்பை வடக்குகிழக்கில் காட்டமுடியும். இது தொடர்பில் முஸ்லிம்களை தமிழர்களிடமிருந்து அந்நியப்படுத்தும் அரச நிகழ்ச்சி நிரலுக்குள் முஸ்லிம் மக்கள் உள்வாங்கப்பட்டுவிடக்கூடாது என்பது எமது கோரிக்கையாக இருக்கின்றது- என்றுள்ளது. (ப)



கரிதாஸ் வாழ்வோதய அமைப்பால் வவுனியா வரோட் நிறுவன அமையப் பயனாளிகள் 15 பேருக்கு மரக்கறி விதைகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-222)

# போக்குவரத்து திணைக்களம் சனி, ஞாயிறும் இயங்கும்

கொழும்பு, ஜூன் 14

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடவடிக்கைகளை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாகனப் பதிவுகள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றுக்கான கோரிக்கை அதிகரித்துள்ளமையால் விடுமுறை தினங்களிலும், அலுவலக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் திணைக்கள ஆணையாளர் நாயகம் சுனித் அழகக்கோன் தெரிவித்தார்.

திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலும், கம்பஹாவில் உள்ள கிளை அலுவலகத்திலும் சாரதி அனுமதிப் பத்திரம், வாகன பதிவுகள் ஆகியவற்றின் கோரிக்கை அதிகரித்துள்ளன. இதனைச் சமாளிக்கும் வகையிலேயே விடுமுறை தினங்களிலும் அலுவலகங்களை திறந்து வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (எ-ரி2)

# மனைவியை கொலைசெய்து காட்டில் புதைத்த கணவர்!

திருகோணமலை, ஜூன் 13

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மெட்டியாவ வடக்கு, குடியிருப்பின் பின்னுள்ள காட்டுப் பகுதியில் மூடப்பட்ட குழி ஒன்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் கடந்த வியாழக்கிழமை மாலை கண்டெடுக்கப்பட்டது என்று தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் வீடொன்றில் வசித்துவந்த பெண்ணைக் காணவில்லை என பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் அந்தப் பெண்ணின் கணவரிடம் (வயது41) விசாரணைகளை நடத்தியுள்ளனர். அவர் தனது மனைவியை (வயது51) மண்வெட்டியால் தாக்கி கொலை செய்து தனது வீட்டுக்குப் பின்னால் உள்ள காட்டுப் பகுதியில் சுமார் 75 மீற்றர் தூரத்தில் குழி ஒன்றில் புதைத்தமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபருக்கு இரு மனைவிகள் உள்ளனர் மூத்த மனைவி வெளிநாட்டில்' வசித்துவரும் நிலையில், மினுவாங்கொட திவுலபிட்டிய பகுதியைச் சேர்ந்த இரண்டாவது மனைவியுடன் வாழ்ந்து வந்துள்ளார் என்றும் நீதிமன்றத்தில் அந்தப் பெண்ணுடன் விவாகரத்து தொடர்பான வழக்கு இருந்ததாகவும் குடும்ப பிணக்கு காரணமாக குறித்த பெண்ணை மண்வெட்டியால் தாக்கி கொன்றதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிஸார் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் நேற்று சென்று விசாரணையில் ஈடுபட்டனர். கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசானி தேனபது சடலம் புதைக்கப்பட்ட குழியை அகழ்வுக்கு அனுமதியளித்ததையடுத்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறைக்கு கொண்டுசெல்லப்பட்டது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தையை ஆரம்பிக்க கோரிக்கை

நாவற்குழி, ஜூன் 14

நாவற்குழி-கேரதீவு வீதியில் ரயில் கடவைக்கு அருகாமையில் இயங்காமலிருக்கும் சந்தையை மீள ஆரம்பிக்குமாறு அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான சாவகச்சேரி பிரதேச சபையின் கடந்த வெள்ளிக்கிழமை அமர்விலும் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தற்போது மீன் வியாபாரம் மட்டும் நடைபெறுகின்றது. இதர பகுதிகளான ஆட்டிறைச்சிக்கடை, மாட்டிறைச்சிக்கடை, கோழி இறைச்சிக் கடை என்பன இயங்காமல் இருக்கின்றன. அவற்றை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றே மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான பரிசீலனையே தற்போது இடம்பெற்று வருகின்றது. (ம-159)

## தென்மராட்சியில் விவசாய வரிகள் நாளைமுதல் அறவிடப்படும்

தென்மராட்சி, ஜூன் 14

தென்மராட்சிப் பிரதேச நெற்செய்கை மற்றும் விவசாய நிலங்களுக்கான இவ்வருட காலபோக நெற்செய்கை உள்ளிட்ட ஏக்கர் வரி அறவிடும் பணிகள் பிரதேச கமநல சேவைகள் நிலையத்தினரால் நாளை தொடக்கம் அந்தந்த கமக்கார அமைப்புகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்பிரகாரம் தென்மராட்சி தெற்கு மறவன்புலோ கமக்கார அமைப்புக்குட்பட்ட பதிவுகள் நாளையும், நாளை மறுதினமும் அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தரின் இல்லத்திலும், தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட பதிவுகள் எதிர்வரும் 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் அமைப்பின் முன்னாள் தலைவர் வ. சதானந்தனின் இல்லத்திலும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் இதுவரை கமக்கார அடையாள அட்டை பெறாத விவசாயிகள் தமது குடும்ப அட்டை, கடந்த வருடம் செலுத்திய ஏக்கர் வரி பற்றுச்சீட்டு மற்றும் புகைப்படம் ஆகியவற்றுடன் வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# கல்வித்துறை பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எம்மிடத்திலேயே உள்ளன

### வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ் சுட்டிக்காட்டு



வவுனியா, ஜூன் 14

**வடமாகாணத்தில் பாடரீதியான ஆசிரியர் பற்றாக்குறைக்கு அப்பால் துறைசார் வல்லுநர்கள் பற்றாக்குறையும் நிலவுகின்றது. இந்த நிலை மாறாதுவிடின் எமது சமுதாயத்தின் நிலை மிகவும் கவலைக்கிடமாக மாறிவிடும் என்று எச்சரித்துள்ளார் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்.**

வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் வவுனியா மாநகர சபை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் வடமாகாண ஆளுநராக பதவியேற்றபோது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நீண்டகாலமாக வலிகளோடும் வேதனைகளோடும் வாழ்கின்ற மக்களுக்கு சேவையாற்றுகின்ற மிகப்பெரும் பணி எனக்கு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எமது மாகாணத்தில் கல்வித் திணைக்களத்தில் மட்டுமல்லாது ஏனைய திணைக்களங்களிலும் ஆளணிப்பற்றாக்குறை நிலவுகின்றது. இதற்கு காரணம் தகுதிவாய்ந்த துறைசார் வல்லுநர்களை உருவாக்க எமது மாகாணம் தவறியுள்ளமையே ஆகும். யுனிசெப் அறிக்கையின்படி கிராமப்புற மாணவர்களில் 85 முதல் 90 சதவீதம் வரை கல்வியை இடைநிறுத்தம் செய்கிறார்கள்.

நகர்ப்புற மாணவர்களே சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்கிறார்கள். அதிலும் மிகக்குறைந்த மாணவர்களே விஞ்ஞானம், மருத்துவம் மற்றும் பொறியியல் பாடங்களை கற்கின்றார்கள். அதிலும் சொற்பமான மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு சென்று கல்வி கற்கின்றார்கள். எமது மாகாணத்தில் பாடரீதியான ஆசிரியர் பற்றாக்குறை மட்டும் நிலவவில்லை துறைசார் வல்லுநர்கள் பற்றாக்குறையும் நிலவுகிறது.

இந்த நிலை மாறாதுவிடின் எமது சமுதாயத்தின் நிலை மிகவும் கவலைக்கிடமாக மாறிவிடும். இதற்கான முழுத்தீர்வும் ஆசிரிய சமூகத்திடம் மாத்திரமேயுள்ளது. மாணவர்கள் ஆசிரியர்களையே முன்மாதிரிகளாகப் பார்க்கின்றார்கள். அதற்கான தகுதியுடன் ஆசிரியர்கள் செயல்படவேண்டும். எமது பின்னடைவிற்கான காரணங்கள் எம்மிடம் இருக்க அதற்கான தீர்வை மத்திய அரசிடம் சென்று கோரமுடியாத நிலையில் நான் இருக்கின்றேன்.

கல்விதான் இந்த மாகாணத்தின் அடித்தளம். கல்வி என்பது எழுத்தை மட்டுமல்ல வாழ்க்கையின் அத்துணை விடயங்களையும் மாணவர்களுக்கு கற்றுத்தரவேண்டும். ஆகவே, பிரச்சினைகளை விரைவாகக் களைந்து மாகாண மாணவர்கள் மற்றும் சமுதாய வளர்ச்சியில் ஆசிரியர்கள் தான் செயற்படவேண்டும். மாகாண கல்வியமைச்சு மற்றும் திணைக்களத்துடன் இணைந்து முழு அர்ப்பணிப்போடும் ஊக்கத்தோடும் செயல்பட்டு வரவிருக்கும் பரீட்சைகளில் முன்னேற்றத்தினை ஏற்படுத்த வேண்டும். அதற்கான முழுமையான ஒத்துழைப்புக்களை நான் வழங்குவேன் என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், பாடசாலை அதிபர்கள், உட்பட வடமாகாண கல்வி அமைச்சு மற்றும் திணைக்கள அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-110)

## கிழக்கை காவுகொள்வதற்காகவே வருகின்றது ஜனாதிபதி செயலணி

### *சட்டத்தரணி சுகாஷ் எதிர்ப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 14

கிழக்கு மாகாணத்தைக் காவுகொள்ளவே ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணியை தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து எதிர்க்க வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் நாடாளுமன்ற வேட்பாளருமான சுகாஷ்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழர்களுடைய தாயகமான இணைந்த வடக்குக் கிழக்கிலே முக்கியமான பகுதி கிழக்கு மாகாணமாகும். இந்தக் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளில் ஒன்றான தாயகக் கோட்பாட்டோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகக் கிழக்கு மாகாணம் காணப்படுகின்றது.

தமிழர்களின் தாயக பூமியான இந்தக் கிழக்கு மாகாணத்தை அடக்கி ஆள்வதற்கும், ஆக்கிரமிப்பதற்கும், கைப்பற்றுவதற்கும் திட்டமிட்ட முறையில் தொல்பொருள் விடயங்களைப் பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் ஜனாதிபதி செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஜனாதிபதி செயலணியானது நிச்சயமாகத் தொல்பொருள் விடயங்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட ஒன்றல்ல.

கடந்த காலங்களில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் வாயிலாக அநேக சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன. திட்டமிட்ட முறையில் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இணைந்த வடக்கு, கிழக்கைப் பிரித்து வைத்துள்ளதோடு வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைகின்ற எல்லைப் பகுதியில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி நிலத் தொடர்ச்சியற்ற வகையில் வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கான முனைப்புக்கள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன.

சிங்கள பௌத்த பேரினவாத அரசானது கொரோனா இடர்கால நிலைமையைப் பயன்படுத்தி அனைவரையும் வீடுகளுக்குள் முடக்கித் திட்டமிட்டு தொல்பொருள்களைப் பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் ஜனாதிபதி செயலணியை உருவாக்கி இருப்பது தமிழர்களை அழிக்கும் ஒரு முயற்சியாகும் - என்றுள்ளது. (ம)



*கண்டாவளைப் பிரிவில்*

## 55 காணிப் பிணக்குகள் தொடர்பில் ஆளுநர் செயலகக்குழு விசாரணை

கிளிநொச்சி, ஜூன் 14

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தீர்க்கப்படாத 55 காணிப் பிணக்குகள் தொடர்பில் ஆளுநர் செயலக விசாரணை குழுவால் நேற்றுமுன்தினம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகள் தொடர்ந்து வரும் நிலையில் ஆளுநரால் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவே மேற்படி விசாரணைகளை முன்னெடுத்தது. நேற்றுமுன்தினம் காலை 9 மணிமுதல் விசாரணைகள் இடம்பெற்றன. (ம-6)

## ம.வி.முன்னணியின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நாளை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத் தலைமைச் செயலகத்தில் நாளை காலை 10 மணிக்கு இந்த ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த உயர்தர
### உயிரியல், கணித, விஞ்ஞான பிரிவு

மாணவர்கள் நிகழ்நிலை வகுப்புகளில் கற்றுக்கொள்ளக் கூடியதும், சுய கற்றலை ஊக்குவிக்கும்.

**இலவச கணினி வசதிகள்**

**இடம்:- கணினி கூடம், கந்தையா உபாத்தியாயர் வீதி, U.P லேன், கந்தரோடை சுன்னாகம்.**

**தொடர்புகளுக்கு:- 077 646 6670**

## வீடு, காணி வாங்கவும் விற்கவும்

அரச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்தால் யாழ் மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை உட்பட ஏனைய பகுதிகளிலும் காணி, வீடுகள் எம்மிடம் உள்ளது. விற்க, வாங்க விரும்புவோர் எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

**Life Star real Estate**
**077 622 4038**




# COMBANK DIGITAL

எதிர்காலம் இப்பொழுது உங்கள் அருகில்

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த டிஜிட்டல் வங்கி அனுபவம் இப்பொழுது ComBank Digital ஊடாக... எமது அனைத்து வங்கிச் சேவைகளும் ComBank Digital உடன் இணைக்கப்பட்டுள்ளதால் உங்களுடைய தனிப்பட்ட வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை இலகுவாகவும், வசதியாகவும் மேற்கொள்வதற்கு நீங்களும் இன்றே ComBank Digital சேவையுடன் இணைந்து கொள்ளுங்கள்.

- சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அதியுயர் பாதுகாப்பு
- எந்தவொரு கணக்கிற்கும் உடனடியாகப் பணம் அனுப்பும் வசதி
- பில்களுக்கு உடனடியாக பணம் செலுத்தும் வசதி
- கையடக்கத் தொலைபேசி மற்றும் கணினி போன்ற எந்தவொரு கருவிகள் மூலமும் செயற்படுத்தக்கூடிய வாய்ப்பு

ComBank Digital சகிதம் எந்தவொரு இடத்திலிருந்தும், எந்த நேரத்திலும் உங்களுக்கு விருப்பமான முறையில் உடனடியாகவும், பாதுகாப்பாகவும், இலகுவாகவும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும்.

சுயமாக பதிவு செய்து கொள்வதற்கு QR குறியீட்டை ஸ்கேன் (scan) செய்து கொள்ளுங்கள்
அல்லது www.combankdigital.com இற்கு பிரவேசியுங்கள்

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது | Fitch Rating AA (lka) | +94 112 353 964 | www.combank.lk

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி றக்கா ஒழுங்கையில் சகல வசதிகளுடனும் ஐந்து அறை வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **0777 360 995**

## விற்பனைக்குண்டு

தனி கறுப்பு நிறமுடைய 12 மாதங்கள் நிரம்பிய பொம்மேறியன் பெண் நாய்க்குட்டி விற்பனைகளுண்டு.

தொடர்பு: **077 6028735, 021 221 2619**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 1984 ஆம் ஆண்டு பிறந்த. நட்சத்திரம் -அவிட்டம் கண் பார்வையற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

**021 2053 081**

## பணிப்பெண் தேவை

இரண்டு பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். **தொடர்பு:**

**021 225 2518, 071 860 9153**

## வீடு வாடகைக்கு

மன்னார் வீதி (A32) நாவற்குழியில் புகையிரத நிலையம், மாகாணசபை அலுவலகம், வைத்தியசாலைகள், கடைகள் அமைந்துள்ள A9 வீதிக்கருகே வருமானத்துடன் கூடிய வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. (உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)

**071 826 6963, 077 615 3877**

## வீடு வாடகைக்கு

யாழ் நகரில் 3km ஏனையன் வீதியில் (A9) அமைந்துள்ள வீடு. 3 அறைகள். கனரக வாகனம் விடக் கூடிய வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **077 222 4561**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியருக்கு பெற்றோர் பட்டதாரி/அரச உத்தியோக / வெளிநாட்டு மணமகளை எதிர்பார்க்கின்ற னர்.
நட்சத்திரம்: புனர்பூசம் 1ம் பாதம் (மணமகளது)
பாவம் : 3ம் சுற்று 45 1/4
பின்வரும் சாதக அமைப்பு பொருந்தாது
உத்தராடம் 2.3.4ம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1ம், 2ம் கால்கள், விசாகம், பூரட்டாதி, மகம், பூரம், 1.7.8, செவ்வாய்குற்ற யாதகம், சூரியன் செவ்வாய் உள்ள சாதக அமைப்புக்கள் பொருந்தாது. தரகர் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புக்கு: **0777 061 892, 077 077 6565**

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மூளாய் பிரதான வீதியில் அமைந்துள்ள 6 லாட்சம் காணியுடன் மேல்தளம் கொண்ட பழைய வீட்டுடன் சேர்ந்த சகல தளபாடங்களுடன் விற்பனைக்கு உண்டு.

**077 369 6829, 077 789 7834**

## மணமகள் தேவை

யாழ். இந்து 1988. அனுஷம். அரச நிரந்தர தொழில்புரியும். மணமகனிற்கு தகுதியான மணமகள் தேவை.

**தொடர்பு:**
**077 309 0827, 077 375 8209**

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**கிளை:**
**K.K.S. வீதி,**
**இணுவில்**



UNLIMITED

Facebook Instagram Twitter LinkedIn

ரூபா. 99 + வரி | #170#

4G

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பங்குபற்றல் இன்றி இம்முறை பெரஹராக்கள்!

## ஜனாதிபதி அறிவுறுத்தல்



**கொழும்பு, ஜூன் 14**

**இம்முறை எந்தவொரு புண்ணியஸ்தலத்திலும் பெரஹராவில் பங்குபற்றுவதற்கும் பார்வையிடுவதற்கும் பொது மக்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பாரம்பரிய மற்றும் சமய கிரியைகளுக்கு முன்னுரிமையளித்து முக்கிய புண்ணியஸ்தலங்களிலும், தேவாலயங்களிலும் பெரஹராக்களை ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.**

கண்டி தலதா மாளிகை மற்றும் கதிர்காமம், தெவிநுவர, சபரகமுவ உள்ளிட்ட தேவாலயங்களை முதன்மையாகக் கொண்டு இடம்பெறும் பெரஹராக்கள் கொவிட் ஒழிப்புக்கு உதவும் வகையில் சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப இடம்பெற வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

வருடாந்த பெரஹராக்களை இந்த முறை ஏற்பாடு செய்யவேண்டிய முறை பற்றி கொவிட் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் பங்குபற்றுதலுடன் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், திருகோணமலை மற்றும் கிழக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களில் இருந்து பாத யாத்திரையாக கதிர்காமத்துக்கு பெரஹரவுக்கு வருகை தருவோருக்கும் இம்முறை அனுமதியில்லை.

அனைத்து பெரஹராக்களையும் குறைந்தளவான கலைஞர்களின் பங்குபற்றுதலுடன் சுகாதார பரிந்துரைகளை பின்பற்றி மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை கொவிட் ஒழிப்பு செயலணி சுட்டிக்காட்டியுள்ளது. பல்வேறு பிரதேசங்களில் இருந்து பெரஹராவில் பங்குபற்றும் கலைஞர்கள் குறித்த பிரதேசத்தின் சுகாதார அதிகாரிகளின் அறிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ரன்தோலி பெரஹராக்கள் வீதி உலா 10 நாள்களும் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, பௌத்த சாசன அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர ஆகியோரும் ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களும் தலதா மாளிகையின் தியவதன நிலமே மற்றும் தேவாலயங்களின் தலைமை பஸ்நாயக்க நிலமேக்களும் கலந்துகொண்டனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காணொலிப்பதிவுகள் மூலம் கைதிகள் பிணை கோரலாம்

கொழும்பு, ஜூன் 14

சிறைக்கைதிகள் சிறைச்சாலைகளில் இருந்து கொண்டே காணொலிப் பதிவு மூலமாக நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கவும், பிணை கோரவும் தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கான அமைச்சரவை அனுமதியும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு கடந்த வியாழக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் 23 சிறைச்சாலைகளில் தடுப்புக்காவலில் விளக்கமறியல் கைதிகள் 15 ஆயிரம் பேர் இப்போது வரையில் இருக்கின்றனர், இவர்கள் பிணை பெற்றுக் கொள்ள நாளாந்தம் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டியுள்ளது. அதனால் பல சிரமங்களை அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா அமைச்சரவையில் தெரிவித்தார்

இவ்வாறு உள்ளவர்களில் கிட்டத்தட்ட 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை நாளாந்தம் நீதிமன்றத்துக்கு அழைத்து செல்லவேண்டியுள்ளது. அவ்வாறு அழைத்து செல்லும் வேளைகளில் பாதுகாவலர்கள் மற்றும் சிறைக்கைதிகள் இடையில் முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்படுகின்றது. அதுமட்டும் அல்லாது வாகன செலவுக்கு மட்டும் 641 மில்லியன் ரூபா வருடத்துக்கு செலவாகின்றது.

ஆகவே இதில் மாற்று முறையொன்றைகையாள வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா அமைச்சரவையில் கூறினார். அதற்கமைய தொழிநுட்பம் மூலமாக சிறைச்சாலைகளில் இருந்துகொண்டே நீதிமன்றத்தில் காரணிகளைமுன்வைக்கும்முறையொன்றை உருவாக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் கொழும்பில் முதல் தடவையாக 23 நீதிமன்றங்களில் இருந்து 4 சிறைச்சாலைகளில் 12 இடங்களில் இருந்து பரீட்சார்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

காணொலிகள் மூலமாக பிணை வழங்கும் முறையொன்றை கையாளவே முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சிறைக்கைதிகள் சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டே வீடியோ தொழில்நுட்பம் மூலமாக தமக்கான நியாயப்பாடுகளை முன்வைத்து பிணை கோரிக்கையை முன்வைக்க முடியும். இது பல வழிகளில் ஆரோக்கியமானதாக அமையும். ஆகவே செலவுகளும் குறையும், பாதுகாப்பும் அதிகரிக்கும். கொரோனா பரவலின் மூலமாக கையாளும் மாற்று வேலைத்திட்டங்களில் இது சிறந்த திட்டமாகும்- என்றார். (ஐ)



# நீருக்கு நன்றி கூறி பொங்கல் வழிபாடு

முல்லைத்தீவு, ஜூன் 14

சிறுதானியப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான நீரைத் திறந்து விட்டமைக்கு நன்றி தெரிவித்து, துணுக்காய் பிரதேச கமக்கார அமைப்பால் பொங்கல் வழிபாடு ஒன்று முன்னெடுக்கப்பட்டது. முல்லைத்தீவு, பாரதிநகரில் கடந்த 11ஆம் திகதி இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மல்லாவிப் பகுதியைச் சேர்ந்த சுமார் 90 விவசாயிகள் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவுள்ளனர். இந்தப் பயிர்ச் செய்கையால் சிறுபோகம் பாதிக்கப்படும் என்ற கருத்துக்கள் வெளிவந்திருந்தன. எனினும் சிறுதானியச் செய்கைக்கு நீர் வழங்கினால் சிறுபோகச் செய்கைக்கு நீர்த் தட்டுப்பாடு வராது என்று அந்தப் பகுதி கமக்கார அமைப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் , துணுக்காய் பிரதேச செயலாளர், மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆகியோருக்கும் கமக்கார அமைப்பினர், விவசாயிகள் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தனர். விவசாயிகளுடைய கோரிக்கையை அடுத்து நீர் வழங்குவதற்கு அதிகாரிகள் முன்வந்தனர். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் விவசாயிகள் இந்தப் பொங்கல் நிகழ்வை ஏற்பாடு செய்தனர். (ப)

# பிலிப்பைன்ஸிலிருந்து 223 பேர் நாடு வந்தனர்

கொவிட் -19 வைரஸ் காரணமாக பிலிப்பைன்ஸ் நாட்டில் நிர்க்கதியாகி இருந்த 223 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை நாடு திரும்பியுள்ளனர். ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்துக்கு சொந்தமான யூ.எல்.1423 என்ற இலக்க விமானத்தில் பிலிப்பைன்ஸ் மணிலாவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாட்டை வந்தடைந்த 223 பேரும் பி. சி. ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பரிசோதனை அறிக்கை கிடைக்கும்வரை ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கல்வி நடவடிக்கைகள், கப்பல் தொழில்களில் ஈடுபட்டிருந்த இலங்கையர்களே இவ்வாறு அழைத்து வரப்பட்டனர் என்று வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ஜனநாத் கொழம்பகே தெரிவித்தார். (எ-ரி2)

# பொருளாதார, சுகாதார நெருக்கடிகளை சீர்செய்ய ஐ.தே.கவால் மட்டுமே முடியும்

## முன்னாள் எம்.பி. வஜிர அபேவர்தன சூளுரை

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் சுகாதார நெருக்கடிகளை உரியமுறையில் முகாமைத்துவம் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசால் மாத்திரமே முடியும் என்று கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளை அரசாங்கத்தினால் உரிய முறையில் முகாமைத்துவம் செய்ய முடியவில்லை. இதனால் நாடு எதிர்காலத்தில் பெரும் அனர்த்தங்களைச் சந்திக்கவேண்டி ஏற்படும். இந்த அனைத்து நெருக்கடிகளுக்கும் ஐ.தே.க.வினாலேயே தீர்வு காணமுடியும். பொதுத்தேர்தலில் ஐ.தே.க. ஆட்சியமைக்க மக்கள் ஆதரவளிக்க வேண்டும். அரசமைப்புக்கு முரணான வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலணியினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் 19 ஆம் அரசமைப்புத் திருத்தம் மற்றும் பழைய அரசமைப்பின்படி சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடாகும்.

அரச நிர்வாகத்துறையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதனால் எதிர்வரும் காலத்தில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் சுகாதார நெருக்கடியை தற்போதைய அரசாங்கத்தினால்உரியமுறையில்முகாமைத்துவம் செய்ய முடியவில்லை. இன்று பல்வேறு அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை தோற்றம் பெற்றுள்ளது - என்றார் (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி உத்தரவிட்டபோதும் செயற்படுத்தப்படவில்லைதான்

## ஏற்கிறார் அமைச்சரவை பேச்சாளர் குணவர்தன



கொழும்பு, ஜூன் 14

**தனிநபர் வங்கிக் கடன்களை மீள அறவிடும்போது சலுகை வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த உத்தரவை செயற்படுத்துவதில் வங்கிகள் பல தயக்கம் காட்டியுள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றேன் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

அடுத்த வாரத்தில் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் நிலைமையால் கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. மக்கள் வருமானம் இழந்திருக்கின்றனர். அதனால் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் மக்கள் பெற்றுக்கொண்டிருந்த கடன்களை மீளச் செலுத்துவதற்கு சலுகை காலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அறிவித்திருந்தபோதும் நிதி நிறுவனங்கள் தற்போது மக்களிடம் தவணையை முறையில் கடனை மீளப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவையில் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர். நிதி நிறுவனங்கள் அனைத்தும் மத்திய வங்கியின் கீழே இயங்குகின்றன. இதன்படி இந்த விடயத்தில் அரசு நேரடியாக உத்தரவிட முடியாது. தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே மத்திய வங்கியுடன் பேசி மக்களுக்கு வங்கிகளுடனான சலுகைப் பொதியை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது.

கொவிட் 19 தொற்று நிலைமையை தொடர்ந்தும் அது தொடர்பான நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்தது. நிதிச் சட்டத்துக்கமைய நிதி விடயங்களைப் பயன்படுத்துவது தொடர்பான சட்ட திட்டங்களை அரசு நேரடியாக மத்திய வங்கிக்கு விடுக்கமுடியாது. நிதிச் சட்டத்துக்கமைய வங்கிகள், நிதி நிறுவனங்களுக்குத் தேவையான ஆலோசனை வழங்குநராக மத்திய வங்கியே செயற்பட முடியும். அது தொடர்பான அதிகாரம் மத்திய வங்கிக்கே இருக்கின்றது.

அரசு சட்டத்துக்கு அப்பால்சென்று செயற்பட முடியாது. இந்தநிலையில் பல வங்கிகள் சலுகை வழங்குவதில் தயக்கம் காட்டியுள்ளன. இதனை ஏற்றுக்கொள்கின்றோம். எவ்வாறாயினும் இது தொடர்பாக அடுத்த வாரத்தில் மேலுமொரு நடவடிக்கையை ஜனாதிபதி எடுக்கவுள்ளார். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் தொழிநுட்ப பிரிவினருடன் அவர் கலந்துரையாடி நடவடிக்கையெடுப்பார் - என்றார். (து)

# டிராக்ரர் சில்லால் மூளையில் காயப்பட்ட மாணவன் உயிர் தப்பினார்

கொழும்பு, ஜூன் 14

மாணவர்கள் சிலரால் தலையில் ரயர் உருட்டி வீழ்த்தப்பட்டதால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த மாணவன் ஓரளவு குணமடைந்து வீடு திரும்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவன் பசிந்து ஹிருஷன் என்பவரே பாதிக்கப்பட்டு குணமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதி சில மாணவர்கள் கட்டடத்திலிருந்து டிராக்ரர் சில் ஒன்றை உருட்டி வீழ்த்தி அதில் சிக்குண்டே மாணவன் மூளையில் காயமடைந்தார். அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்தார். இந்தநிலையில், 96 நாள்களின் பின்னர் வீடு திரும்பியுள்ளார் என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் உணவு, நீராகாரம் உட்கொள்ளமுடியாத நிலையிலேயே இருந்தார் என்று அந்த மாணவனின் சகோதரன் கூறியுள்ளார். இருப்பினும், அவரால் இன்னும் நடக்க முடியவில்லை.

டிராக்ரர் சில்லை உருட்டிவிட்ட மாணவர்கள் மதுபோதையில் இருந்தனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் மிரிஹானா பொலிஸ் விசாரணையிலுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (து)

# சர்வாதிகார ஆட்சி பற்றிப் பேச கூட்டமைப்புக்கு உரிமையில்லை

## கூறுகின்றார் ரத்னாயக்க



கொழும்பு, ஜூன் 14

அரசு இராணுவ ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதாக ஐக்கிய தேசியக் கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் குற்றஞ்சாட்டுகிறார்கள். கூட்டமைப்பினருக்கு சர்வாதிகார ஆட்சிமுறைமை தொடர்பில் கருத்துரைப்பதற்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி. ரத்னாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசை விமர்சித்து தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குரிமையை பயனற்றதாக்கவே இவர்கள் முயற்சிக்கிறார்கள். ஜனாதிபதி கோத்தாபய ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போதுதான் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெரிதும் எதிர்பார்த்தார். ஆனால் கணிசமான எவு ஆதரவே அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றது.

அரசு ஒருபோதும் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை மறுக்கவில்லை. அத்துடன் இராணுவ ஆட்சி முறையை முன்னெடுத்தும் செல்லவில்லை. சர்வாதிகார ஆட்சி தொடர்பில் கருத்துரைக்கும் தார்மீக உரிமை கூட்டமைப்பினருக்குக் கிடையாது. எதிர்த்தரப்பினர் அரசுக்கு எதிராக முன்வைக்கும்குற்றச்சாட்டுகளுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் இந்தமுறை ஏமாற வேண்டாம். நல்லாட்சி அரசை ஸ்தாபித்ததன் பயனை சிறுபான்மை மக்கள் பெறவில்லை. மாறாக நெருக்கடிகளுக்கு உள்ளானார்கள். இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள்- என்றார். (ப)

# பி.சி.ஆர். சோதனைக்கு மறுத்தவர் அமெரிக்க இராஜதந்திரி அல்லர்!

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். சோதனைக்கு உட்பட மறுத்தவர் அமெரிக்கத் தூதுவர் இல்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இராஜதந்திர கடவுச்சீட்டுள்ள அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த அந்த அதிகாரி இராஜதந்திரி அல்லர். அமெரிக்காவின் இந்தோ பசுபிக் கட்டளைப்பீடத்தைச் சேர்ந்தவர். இந்தத் தருணத்தில் அவர், வியன்னா பிரகடனத்தை தவறாகப் பயன்படுத்தி ஏன் இலங்கைக்கு வந்தார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

குறிப்பிட்ட நபர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்த மறுத்தமை பாரதூரமான விடயம், இதன் மூலம் அமெரிக்கத் தூதரகம் இலங்கையின் இறைமையை மீறியுள்ளது. இந்த நடவடிக்கையால் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ம)

### இந்தியாவின் உதவியுடன்

# பலாலி விமான நிலையத்தில் விரைவில் அபிவிருத்திப் பணி

யாழ்ப்பாணம், ஜூன் 14

பலாலி சர்வதேச விமான நிலையம் இந்தியாவின் உதவியுடன் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படும்என்றுசுற்றுலாமற்றும்விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி தொடர்பாக, இந்திய அரசுடன் விரைவில் இலங்கை அரசு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்ளும். ஏற்கனவே இந்த உடன்பாட்டை செய்துகொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில் கொரோனா பரவல் காரணமாக உடன்பாடு கைச்சாத்தாக தாமதம் ஏற்பட்டது. தற்போது நாடு படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதால், பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை விரைவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆண்டு பலாலி சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டபோது, அதன் அபிவிருத்திக்காக இந்தியா 30 கோடி ரூபாவை வழங்குவதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நாமலை பாராட்டிய ஹிருணிகா

கொழும்பு, ஜூன் 14

கல்கிஸை கடற்கரை திட்டம் குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் நிலைப்பாடு தொடர்பில் மகிழ்ச்சி அடைகின்றேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்கிஸை கடற்கரையில் கொட்டப்பட்ட மணல் முழுமையாக அடித்துச் செல்லப்பட்ட சம்பவத்தை நாமல் ராஜபக்ஷ நிதிக்குற்றச்சாட்டு எனவும், அது தொடர்பில் விசாரணைக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இந்த நிலையில், நாமல் ராஜபக்ஷவின் செயற்பாடு குறித்து எதிர்க்கட்சி என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றோம் என்று ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியைச் சந்தித்திருக்க வேண்டும் எனவும், இது குறித்து விசாரணை நடத்துமாறும் அவரிடம் கோரியிருக்கவேண்டும்எனவும்ஹிருணிகா கூறியுள்ளார். இந்த நிலையில், தான் கூறியிருக்கும் கருத்துத் தொடர்பில் நாமல் ராஜபக்ஷவிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியேறுங்கள் அல்லது வெளியேற்றுங்கள்!!

திருமதி. மனோன்மணி சதாசிவம்
மூத்த சட்டத்தரணி, பிரபல நொத்தாரிசு,
பதில் நீதிவான், உயர் நீதிமன்றம், வவுனியா

ஓர் இனம் தன்னிகரில்லா வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் அவ்வினம் ஐக்கியப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் ஈழத்தில் வாழும் தமிழர்களாகிய நாங்கள், அற்ப சொற்ப சலுகைகளுக்கும் பதவிகளுக்கும் விலைபோகும், சொந்த இனத்தைச் சேர்ந்த துரோகிகளால் தொடர்ந்தும் துரோகத்துக்கு உள்ளாகிறோம். நாங்கள் இந்த துரோகிகளின் ஈனத்தனமான செயல்களால் இனியும் தொடர்ந்து பாதிக்கப்பட முடியாது. 2009 வரை ஈழத்தில் இடம்பெற்ற மாபெரும் தியாகங்களுக்கு பின்னரும் இடம்பெறும் இந்த துரோக செயல்களின் தொடர்ச்சியினால் எங்களுடைய சகிப்புத் தன்மை எல்லை கடந்துவிட்டது.

ஓர் அரசியல் கட்சியில் அங்கம் வகிக்கும் ஒருவர் தனது சொந்தக் கருத்தைத் தவிர்த்து, மக்களின் குரலாக, மக்களின் கருத்தைப் பொது அரங்குகளில் தெரிவிக்கும் பக்குவம் உடையவராக இருக்கவேண்டும். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுமந்திரன் தொடர்ந்து தெரிவித்து வரும் கருத்துக்கள் தமிழர்களாகிய எங்கள் மனங்களை நோகடிக்கும் விதமாக அமைகின்றன. அவரிடத்தில் கொஞ்சமாவது கண்ணியம் எஞ்சி இருந்தால், அவர் உடனடியாக தானாக முன்வந்து பதவி விலகவேண்டும். அவர் தனது சொந்த விருப்பப்படி அதைச் செய்யத் தவறினால், தமிழ் மக்களாகிய எங்களின் கருத்துக்கு மதிப்பளித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அவரைக் கட்சியிலிருந்து நீக்கிவேண்டும்.

மக்களாகிய நாங்கள் சுமந்திரனின் கருத்துச் சுதந்திரத்தையும், அவர் தனது சொந்தக் கருத்தை வெளிப்படுத்தும் உரிமையையும் மதிக்கும் அதேவேளை, அவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட நோக்கத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களின் அரசியல் அபிலாசைகளையும் பரஸ்பரம் மதிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். தனது சொந்த நிகழ்ச்சி நிரலைத் நிறைவேற்றும் தளமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்த அவர் அனுமதிக்கப்படக்கூடாது என்பதை நாம் தெளிவாகக் கூற விரும்புகிறோம். அவரிடம் துணிவு இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி சுதந்திரமான ஒரு கட்சியை அமைத்து, தமது சொந்தக் கருத்தைத் தாராளமாக போதித்து வெற்றிபெற்றுக் காட்டவேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பில் குளிர்காய்வதை நிறுத்தவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வரலாறு என்பது எப்போதும் விடுதலைப் புலிகளுடன் பின்னிப்பிணைந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது, விடுதலைப் புலிகளின் முயற்சியில் 2001 ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது.

அப்போதைய TULF பொதுச்செயலாளர் சம்பந்தன், "ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்கு (புலிகள்) முழு அரசியல் ஆதரவையும் அளிக்க வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள அனைத்து தமிழ் அரசியல் சக்திகளும் ஒரே பதாகையின் கீழ் ஒன்றுபடுவதற்கான நேரம் வந்து விட்டது" என்று அறிவித்திருந்தார்.

2006 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றில், "இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களிடையே புலிகளுக்கு கிடைத்த பெரும் ஆதரவு மற்றும் ஒற்றுமையின் அடையாளமாகத் தமிழ் மக்களின் உண்மையான ஏக பிரதிநிதிகளாக நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கும் ஆணையையே மக்கள் தேர்தல் மூலமாகவும் கூட்டமைப்புக்கு வாக்களித்ததனூடாகவும் நிரூபித்துள்ளனர்" என தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

"புலிகளின் பங்களிப்புடன் எங்கள் மக்களின் சக்தியாக உருவான தமிழ்த் தேசியக் கூட்டணியை யாராலும் உடைக்க முடியாது" என்று 2019 ஆம் ஆண்டில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதில் புலிகளின் பங்களிப்பு குறித்து பேசிய போது தெரிவித்திருந்தார்.

2010 இல் சுமந்திரன் மக்களால் தெரிவுசெய்யப்படாமல் தேசியப் பட்டியல் மூலமாகத்தான் முதன் முதலில் நாடாளுமன்ற உறுப்பினராகினார். கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றியோ அல்லது அதன் ஆரம்பகால வரலாற்றைப் பற்றியோ அவர் அறிந்திருக்க மாட்டார் என்பதை புரிந்து கொள்ளும் நாங்கள் அவரை அவ் வரலாற்றை எங்காவது தேடிக்கற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

சுமந்திரன் உண்மையில் ஒரு மனித உரிமை வழக்கறிஞரோ அல்லது மக்கள் பிரதிநிதியோ அல்ல என்பதைப் அவர் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்துள்ளார். எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் அவர் மனித உரிமைகள் சட்டம் அல்லது சர்வதேச சட்டத்தைப் படித்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. அவர் எந்த அரசியல் கைதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியதாக அல்லது எந்தவொரு பொது நலன் வழக்குகளிலும் ஈடுபட்டதற்கான சாட்சிகள் இல்லை. உண்மையில், அவர் எப்போதுமே கொழும்பைத் தளமாகக்கொண்டு பணத்துக்காக வழக்காடும் ஒரு சராசரி அப்புக்காத்தாகவே வாழ்ந்துள்ளார். வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றி ஒருபோதும் அவர் கவலைப்படவில்லை.

ஒரு வழக்கறிஞருக்கு உரிய அடிப்படை ஒழுக்க விதிமுறைகளை கூட சுமந்திரன் என்றும் பின்பற்றியதில்லை. இதற்கு சிறந்த உதாரணமாக 2006 இல் வடக்கு கிழக்கை இலங்கை அரசு பிரித்ததை எதிர்த்து ரெலோ சார்பாகத் தொடரப்பட்ட வழக்கில் சட்டவாளராக நியமிக்கப்பட்ட, அந்த வழக்கை மனுதாரர்களின் அனுமதியின்றியே மீளப் பெற்றுக்கொண்டார். இது பாரதூரமான குற்றம் மட்டுமன்றி, அவர் ஒரு சட்டத்தரணியாகக் கடமையாற்ற தகுதியற்றவர் என்பதையும் நிருபிக்கிறது. ஒரு வழக்கறிஞர், தனக்குப் பரிச்சயம் இல்லாத துறையில் தன்னை நிபுணர் என பாசாங்கு செய்வதும், எந்த விதமான அனுபவமும் இல்லாமல் சட்ட ஆலோசனைகளை வழங்க முயற்சிப்பதும் கீழ்த்தரமான ஒரு தொழில் சார்ந்த தந்திரமாகும். இவ்வாறாகவே, சுமந்திரன் தன்னை ஒரு மனித உரிமை வழக்கறிஞராகக் காட்டி, சர்வதேச சட்டம் தொடர்பான விடயங்களில் தவறான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் மக்களை தவறாக வழிநடத்தும் கேவலமான செயலைச் செய்து வருகிறார்.

எடுத்துக்காட்டாக, வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட 25 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 2015 நவம்பரில் நடைபெற்ற ஒரு விழாவில் சுமந்திரன் EXPRESS செய்தித்தாள் ஊடகவியலாளரிடம் "1990களில் புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டு முஸ்லிம்களை கட்டாயமாக வெளியேற்றியது ஒரு இன சுத்திகரிப்பு நடவடிக்கை ( Ethhnic Cleansing)" என்று தெரிவித்தது மட்டுமன்றி, அதைத் தமிழர்கள் காலம் காலமாக அனுபவித்துவரும் இனப்படுகொலையுடன் ஒப்பிட்டும் பேசியிருந்தார்.

அவரது இந்த கருத்து, அவர் சர்வதேசச் சட்டம் பற்றி அறியாதவர் மட்டுமல்ல அவருக்கு வரலாறு குறித்த அறிவும் மிகக்குறைவாக உள்ளது என்பதையும் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கிறது. முதலாவதாக, சுமந்திரன், இனச் சுத்திகரிப்பு என்பதன் சட்டரீதியான வரைவிலக்கணத்தை அவர் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, இனச் சுத்திகரிப்பு மற்றும் இனப்படுகொலை என்பவற்றுக்கான வித்தியாசத்தை கற்றுக் கொள்ள வேண்டும்.

யூகோசிலாவியாவில்; நடைபெற்ற சர்வதேச மனித உரிமை மீறல்களை விசாரிக்க அமைக்கபட்ட ஐக்கிய நாடுகளின் நிபுணர் ஆணையம், அதன் இடைக்கால அறிக்கையில் (S/25274) இனச்சுத்திகரிப்பு என்றால் "மரபுவழியாக வாழ்ந்த இடத்திலிருந்து ஒரு இன மக்களை பலத்தை பயன்படுத்தி கட்டாயமாக வெளியேற்றுதல் " என்று குறிப்பிட்டுள்ள போதிலும், அதன் இறுதி அறிக்கையில் (S/1994/674) ஏதாவது ஒரு இனத்தை அல்லது ஒரு மதத்தை சேர்ந்தவர்களால், இன்னொரு இனத்தை அல்லது மதத்தை சேர்ந்த மக்களை, குறிப்பிட்ட நிலப்பகுதிகளில் இருந்து, வன்முறை மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் நிரந்தரமாக வெளியேற்றுதற்காக, திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட கொள்கையே இனசுத்திகரிப்பு" என தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு முஸ்லிம்களை முழுமையாக அகற்றி தமிழருக்கு மட்டுமான தமிழீழத்தை உருவாக்கும் எந்தவிதமான "திட்டமோ" அல்லது "கொள்கையோ" புலிகளிடம் ஒன்றும் இருந்ததில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. [illegible] சதியால், முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த, ஜிகாத் என்ற ஆயுதக் குழு உருவாக்கபட்டது, மதக்கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன. இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள சில முஸ்லிம் வீடுகள், கடைகள் மற்றும் மசூதிகளில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு நடைபெறவிருந்த பெரும் மதக்கலவரத்தை தடுப்பதற்காவே முஸ்லிம்கள் தற்காலிகமாக வெளியேற்றப்பட்டனர். அந்தச் சூழ்நிலையில், அவ்வாறான ஒரு தந்திரோபாயமான முடிவை எடுக்க புலிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்தச் சமயோசித முடிவால் பெருந்தொகையான உயிர் மற்றும் உடமை சேதங்கள் தவிர்க்கபட்டன என்பதை அறிவாளிகள் மட்டுமே உணர்வார்கள்.

டாக்டர் ஞான சங்கரலிங்கம் தனது கட்டுரையில் சரியாகச் சுட்டிக்காட்டியபடி, முஸ்லிம்களுக்குச் சொந்தமான சொத்துக்களை தமிழர்கள் ஆக்கிரமிக்கவோ அல்லது பயன்படுத்தவோ புலிகள் அனுமதிக்கவில்லை. மேலும் அவை யுத்த நிறுத்தத்தின்போது திரும்பி வந்த முஸ்லிம் உரிமையாளர்களிடம் புலிகளால் பாதுகாப்பாக திருப்பிக் கையளிக்கபட்டன.

13 ஏப்ரல் 2002 அன்று, தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையில் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் ஒரு கூட்டத்தை நடத்தினர். இந்த சந்திப்பு தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் உடன்பாட்டை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. இதில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூஃப் ஹக்கீம், அதாவுல்லா, உத்துமலேபே, மொஹிதீன் அப்துல் கேடர், பஸீர் செகு தாவூத், மசூர் நூர்தீன் மற்றும் மசூர் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டனர்.

புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைத் தலைவர் சு.ப தமிழ்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் மாவட்டத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் சார்பில் அன்ரன் பாலசிங்கம் கருத்து தெரிவிக்கையில், "கடந்த காலத்தில் நடந்தவற்றுக்காக நான் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கேட்டேன். கடந்த காலத்தில் நடந்ததை மறந்துவிட வேண்டும். அவர்களுடன் பேசி அவர்களின் பிரச்சினைகளை தீர்க்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் " என்று குறிப்பிடது மட்டுமல்லாமல், வடக்கில் முஸ்லிம்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பலாம் என்று உறுதியளித்தனர்.

இது மட்டுமன்றி, "தமிழ் தாயகமும் வடகிழக்கில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களும் முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமானது" என்றும் அவர் வலியுறுத்தினார். இதனை ஏற்றுக்கொண்ட முஸ்லிம் தலைவர் ஹக்கீம், முஸ்லிம் மக்கள் புலிகளை மன்னிக்கத் தயாராக இருப்பதாக் கூறினார்.

இது புலிகள் எந்த விதத்திலும் முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதையும், அவர்களின் பெருந்தன்மையையும் எடுத்துக்காட்டுகிறது. ஆனால், தனது சொந்த சுயநல காரணங்களுக்காக பழைய காயங்களைக் கிளறி, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடையே மீண்டும் வெறுப்பைத் தூண்டுவது சுமந்திரனின் கடைகெட்ட செயற்பாடு அல்லவா?

சுமந்திரனுக்கு சர்வதேச சட்டத்தைப் பற்றிய இம்மியளவு அறிவு இருந்திருந்தால் கூட, 1990இல் இடம்பெற்ற முஸ்லிம் வெளியேற்றம் எந்த வகையிலும் "இனச் சுத்திகரிப்பு" என்ற வரையறையில் அடங்காது என்பதை அவர் உணர்ந்திருப்பார். மேலும் முஸ்லிம் தலைவர்கள் கூட நடந்தவற்றை மறந்து முன்னேற முடிவுசெய்துள்ள போதும், சுமந்திரன் முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளை பெறுவதற்காக, அவர்களைத் தவறாக வழிநடத்த முயல்வது மிகவும் அருவருப்பானது.

டிசம்பர் 2015 இல் சுமந்திரன், ஜெனீவாவுக்குச் சென்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றும் போது, "இலங்கையில் நடைபெற்ற இறுதியுத்தத்தில் அரசபடைகள் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறைகளின்படியே நடந்துகொண்டன .அங்கு தமிழ் இனப்படுகொலை நடக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியேறுங்கள்

(தொடர்ச்சி)

வில்லை" என்றும் தெரிவித்ததாக டாக்டர் எஸ். ஐ. கீத பொன்கலன் Colombotelegraph பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இலங்கையில் நடப்பது ஒரு இனப்படுகொலைதான் என்பதை முதல்முதலாக, டிசம்பர் 1997, இல் லண்டனில் இயங்கும் தமிழர் தகவல் மையம் (TIC) பிரகடனம் செய்திருந்தது. Dr Lutz Oette என்ற ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த, தற்போது SOAS University of London இல் விரிவுரையாற்றும், பிரபல சட்ட வல்லுநர்,மேற்கொண்ட ஆய்வுகள் அடிப்படையிலேயே தமிழர் தகவல் மையம் "The International Crime of Genocide: The case of the Tamil People in Sri Lanka" என்ற இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தது. அதுமட்டுமின்றி 2009க்கு பின்னர் Professor Francis A Boyle, Professor Ramu Manivannan, Professor M Sornaraja, Bruce Fein, Lee Rhiannon, Deirdre McConnell போன்ற உலகின் தலைசிறந்த சர்வதேச சட்ட வல்லுநர்கள் தமக்குக் கிடைத்த ஆதாரங்களை ஆழமாக ஆராய்ந்து, தமது ஆய்வறிக்கைகள் மூலம் இது இனப்படுகொலை தான் என உறுதியாகத் தெரிவித்துள்ளார்கள்.

இது மட்டுமன்றி, ஜேர்மனியில் நடைபெற்ற இலங்கையின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் (Permanent Peoplejs Tribunal) பெரும் புகழ்வாய்ந்த பன்னிரு நீதிபதிகள் கொண்ட குழு, ஆதாரங்களையும் சாட்சிகளையும் பலநாட்களாக கேட்டு ஆராய்ந்து, அவற்றின் அடிப்படையில், இலங்கையில் நடைபெற்றது மற்றும் நடைபெற்றுக்கொண்டிருப்பது இனப்படுகொலைதான் என்று ஐயம் தெளிவுறத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பாயம் சர்வதேச உரிமைகள் மற்றும் விடுதலைக்கான மக்கள் அமைப்பு உதவியுடன் நடத்தபடுகிறது. இவ் அமைப்பு 1979 இல் இத்தாலியில் உருவாக்கப்பட்டது. இதில் ஐந்து நோபல் பரிசுபெற்ற அறிஞர்கள் உட்பட 31 நாட்டு சமூக தலைவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்த அமைப்பு வியட்நாம் மீதான தீர்ப்பாயம்(196667) மற்றும் இலத்தீன் அமெரிக்கா சர்வாதிகாரம் (19741976) போன்றவிடயங்களைக் கையாண்டுள்ளது.

இவை தொடர்பாக சுமந்திரன் அறியவில்லை போலும். இறுதி யுத்தத்தில் நடந்த இனப்படுகொலைக்கான போதிய ஆதாரங்களுடன் வணபிதா இராயப்பு யோசப்பு ஆண்டகை Stephen Rapp என்ற அமெரிக்கத் தூதருக்குப் புரியவைத்தார். அதனைக்கூட சுமந்திரன் அறியவில்லையா?

இலங்கையில் நடந்தது இனப்படுகொலை அல்ல என்று முன்பு வாதிட்டு வந்த சுமந்திரன், தற்போது, சற்று நழுவி, தற்போது "இலங்கையில் நடந்தது இனப்படுகொலை தான் என சர்வதேசத்திடம் உறுதிப்படுத்த எம்மிடம் இன்று போதிய சாட்சிகள் இல்லை. எனவே எதிர்காலத்தில் அதை நிரூபிக்கும் வரை அதை இனப்படுகொலை என்று கூறக் கூடாது" என்று புலம்பெயர் தமிழ் சமூகத்திடம் கதைவிட்டு வருகிறார். வடக்கு மாகாண சபை இனப்படுகொலை தீர்மானத்தை கொண்டுவந்த போது தான் எதிர்த்ததற்கான காரணம், அந்தக் கோரிக்கையை சர்வதேச நீதி மன்றம் அல்லது யு.என்.எச்.ஆர்.சி நிராகரிப்பதை தான் விரும்பவில்லை என்பதுதான் எனக் கூறிவருகிறார்.

செப்ரெம்பர் 2015 இல் ஜெனீவாவில் லதன் சுந்தரலிங்கம் என்பவர் இவரைப் பேட்டி கண்டபோது, 'வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒரு முட்டாள்தனமான நடவடிக்கை" என்றும் சுமந்திரன் கூறினார். முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் தனது ஆலோசனையை எதிர்த்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி இனப்படுகொலை விசாரணைக்கான கதவை மூடிவிட்டதாக மேலும் தெரிவித்தார். நீதியரசர் விக்னேஸ்வரன் தன்னை விட சட்டத்துறையில் எத்தனைபடி சிறந்தவர் என்பதைக் கூட சுமந்திரன் மறந்துவிட்டார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றின் கேள்விகளுக்கு பதிலளித்தபோது, சுமந்திரன், இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணை முழுமையாக நிறைவடைந்துள்ளதாகவும், 16 நவம்பர் 2015 அன்று ஜெனீவாவில் வெளியிட்ட 251 பக்க அறிக்கை ஒரு முழுமையான மற்றும் விரிவான ஆவணமாகும் என்றும் அப்பட்டமாக பொய்யுரைத்தார். முதலாவதாக, இந்த அறிக்கை முழுமையயானது அல்ல என்பதை சுமந்திரன் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இது பெப்ரவரி 2002 முதல் நவம்பர் 2011 வரை மட்டுமான விடயங்களையே உள்ளடக்கியுள்ளது. இரண்டாவதாக, இவர் கூறுவது போல இந்த அறிக்கையானது யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டதை உறுதிசெய்கின்றபோதிலும், நடந்தது இனப்படுகொலை என்பதை உறுதிப்படுத்த போதுமான ஆதாரம் இல்லை என்று எந்த இடத்திலும் தெரிவிக்கவில்லை. இது போலவே, ஐ.நா. மனித உரிமை சபையின் முன்னாள் ஆணையாளர், இளவரசர் சாயிட் அவர்களிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, அவரும் நடந்தது இனப்படுகொலை என்பதை உறுதிப்படுத்த போதுமான ஆதாரம் இல்லை என்று பதிலளித்ததாகச் சொல்வது முற்றிலும் பொய்யானது. இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றதற்கான பதிவுகள் எங்கும் இல்லை.

அதே நேர்காணலில், சுமந்திரன், தான் தமிழர்களை ஆதரிக்கும் பல சட்டநிபுணர்களுடன் பேசியதாகவும்,"அவர்கள் அனைவரும்" இனப்படுகொலையை நிரூபிக்கபோதுமான ஆதாரங்கள் இல்லை என்று அறிவுறுத்தினர் என்றும் கூறினார். ஆனால் எந்தவொரு நிபுணரையும் அவரால் பெயர் குறிப்பிட முடியவில்லை என்பது அவரது கூற்றில் எந்த உண்மைத்தன்மையும் இல்லை என்பதையே காட்டுகிறது. அவரது நேர்மையற்ற தன்மையையும், தமிழ் சமூகத்தை முட்டாளாக்கும் திறனையும் நிரூபிக்க இந்த உண்மைகள் போதுமானவை.

விடுதலைப் புலிகள் போர்க்குற்றங்களைச் செய்ததை ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பதாக 2019 ஜனவரியில் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். "இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் இரண்டும் போர்க்குற்றங்களைச் செய்ததாக அனைத்து சர்வதேச அறிக்கைகளும் மிகத் தெளிவாகக் கூறுகின்றன" என்றும் அவர் மீண்டும் மீண்டும் கூறுகிறார். ஆனால், ஐ.நா.வின் OISL அறிக்கையில்; இலங்கை அரசபடைகளால் தமிழ்ப் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் மிகக்கொடூரமான பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுவருவதனை இந்த விசாரணை உறுதிப்படுத்தியிருப்பது மிகவும் வருத்தமானது. அத்துடன் பாலியல் சித்திரவதைகள் தொடர்ந்து வருவது மிகவும் அதிர்ச்சி தருகிறது. விடுதலைப்புலிகள் பாலியல் சித்திரவதைகளில் ஈடுபட்டதுக்கான எந்தவிதமான தகவலும் எமக்கு கிடைக்கவில்லை" என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை தான் நன்கு அறிந்திருப்பதாக கூறிவரும் சுமந்திரன், மேலே உள்ள முக்கிய தகவலை திட்டமிட்டு இருட்டடிப்பு செய்துவருவது அவர் தனது சொந்த தமிழ் சமூகத்திற்கே துரோகம் செய்கிறார்.

சுமந்திரன் தன்னை மீண்டும் மீண்டும் தலைமைத்துவ ஆற்றல் கொண்டவரோ அல்லது தனது சொந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் திறன் கொண்டவரோ இல்லை என்பதை நிரூபித்து வருகிறார். ஒரு தலைவராக அல்லது மக்கள் பிரதிநிதியாக இருப்பதற்கான மிக அடிப்படையான தகமை, தனது சொந்தக் கருத்துக்களை ஒதுக்கி வைத்து, தன்னையோ தான் சார்ந்த கட்சியையோ நம்பி வாக்களித்த மக்களின் அபிலாசைகளையோ பிரதிநிதித்துவப்படுத்துவதே ஆகும்.

ஆனால் சுமந்திரன் தனக்கு வாக்களித்த மக்களின் கருத்துக்களைப் பற்றி எள்ளளவு கூட கவலைப்படாமல், தனது தவறான சொந்தக் கருத்துக்களை மட்டுமே தெரிவித்து வருவதுடன், அதனை மக்களிடம் திணிக்க முற்படுவதும் சகிக்க முடியாதது.

மிக சமீபத்தில், 08 மே 2020 அன்று, சுமந்திரன், முன்னாள் ஊடக இயக்குநராக இருந்த சமரவிக்ரமாவுடனான சிங்களப் பேட்டியில் கூறிய கருத்துக்களால் அவரது சொந்தக் கட்சியினர் உட்பட தமிழ் அரசியல் வட்டாரம் முழுவதும் கொதிப்படைந்துள்ளது யாவரும் அறிந்ததே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் குறித்து அவர் அப்பட்டமாகப் பொய் சொன்னார், மேலும் தமிழர்களின் ஆயுத விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப் படுத்தினார். மேலும் வடக்கு, கிழக்கு முழுவதும் தமிழர்களிடையே பரவலான கோபத்தையும் சீற்றத்தையும் தூண்டிய இலங்கையின் சிங்கக் கொடி மற்றும் தேசிய கீதத்தை தான் ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறியதானது அவரது சொந்தக் கட்சியில் உள்ள சக சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கூட விமர்சனங்கள் ஏற்படக் காரணமாகியது. இது போலவே, 2015 ஆம் ஆண்டில் அவர் சண்டே லீடரில் ஆங்கிலத்தில் தனது கட்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விசுவாசம் இல்லை என்றும் அவர்களின் சித்தாந்தத்துக்கு உடன்படவில்லை என்றும் கூறியிருந்தார்.

மேலும் தமது கட்சி "பயங்கரவாதத்துக்கு" ஆதரவளித்தில்லை என்று தெரிவித்ததன் மூலம்,விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்ற கருத்தை மறைமுகமாக வழங்கியிருந்தார். சுமந்திரன் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளிடமிருந்து தன்னைத் தூர விலக்கிக் கொண்டதாக காட்டிக்கொண்டு, "புலி ஆதரவுப் புலம்பெயர்ந்தோருடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை" என்று அவர் கூறியது புலம்பெயர்ந்த தமிழரை கடுமையாக புண்படுத்தியது.

சுமந்திரனுக்கு கடுமையான எதிர்ப்பு அதிகரிக்கத் தொடங்கியபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஒரு பத்திரிகை அறிக்கையை வெளியிட்டார். நான் சுமந்திரனின் சிங்கள நேர்காணலை முழுமையாக பார்க்கவில்லை எனினும்,"இது அவரது தனிப்பட்ட கருத்து தமிழ்த் தேசியக் கூட்டணியின் அல்லது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடாக கருதப்படக் கூடாது" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், சம்பந்தனின் சொந்தக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்கள், பிற தமிழ் கட்சிகளின் தலைவர்கள் சுமந்திரனைப் போலல்லாமல், தமிழீழ விடுதலைக்கான புலிகளின் ஆயுதப் போராட்டம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கான காரணங்களுடன் நீண்டகாலத் தொடர்பினைக் கொண்டவர்கள். அவர்கள் சுமந்திரனின் நடவடிக்கைகள் மற்றும் கருத்துக்களுக்கு எதிராக தங்கள் கவலையையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முக்கிய பதவிகளை வகிக்கும் சுமந்திரனின் கருத்துக்கள் அவரது சொந்த கருத்தாக கருதி விட்டுவிடகூடாது என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களின் சங்கம் உட்பட பல சிவில் சமூக அமைப்புகளும் சுமந்திரனைக் கண்டித்ததுள்ளன, "சுமந்திரன் கொழும்புக்கு விசுவாசமானவர், கொழும்பை விரும்புகிறார். அவர் தமிழ் மக்களைப் பற்றி சிறிதும் கவலைப்படுவதில்லை. சிங்கள மக்கள் அவரை சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கு ஒத்த நபராகவே பார்க்கிறார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவர் செயற்படுகிறார். இலங்கை அரசாங்கத்தின் அரசியலமைப்பைப் பாதுகாக்க அவர் பணியாற்றுகிறார்" என்று தெரிவித்தன. வவுனியாவில் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தங்களது 715 ஆவது நாளில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டத்தில் " சுமந்திரனைத் தமிழ் அரசியலில் இருந்து நீக்கிய பின்னரே தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைக்கும்." என்று எழுதப்பட்ட ஒரு பெரிய பதாகையை ஏந்தி ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களை சுமந்திரன் "புலம்பெயர் புலிகள்" என்று குறிப்பிடுவது மிகவும் புண்படுத்தக்கூடியது மற்றும் மன்னிக்க முடியாதது, இது வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் குறித்து இலங்கை உளவுத்துறையின் அதே கருத்தை அவர் பகிர்ந்து கொள்கிறார் என்ற உண்மையை தெளிவாக அம்பலப்படுத்துகிறது. இதுபோலவே பெப்ரவரி 2017 இல் தன்னைக் கொலை செய்யும் முயற்சிக்கான திட்டமிடல் வெளிநாட்டில் நடந்துள்ளது என்று ஒரு போலியான குற்றச்சாட்டையும் அவர் புலம் பெயர் தமிழ் மக்கள் மீது சுமத்தியிருந்தார். புலம்பெயர் செயற்பாட்டாளர்களை இவ்வாறு புலி முத்திரை குத்துவதானது, அவர்கள் இலங்கை திரும்பும்போது கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாவதற்கு வழிகோலி உள்ளது. எஸ்.ரி.எவ் பாதுகாப்பை பெறுவதற்காக சுமந்திரனால் அரங்கேற்றப்பட்ட ஒரு திட்டமிட்ட சதி நாடகம் தான் இந்தக் கொலைமுயற்சி என்பதற்கான நம்பகமான தகவல்கள் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இந்தச் சதியில் பலிக்கடாவாக்கப்பட்ட, அப்பாவியான 5 முன்னாள் போராளிகள் கைதுசெய்யப்பட்டு, இன்னும் சிறையில் சித்திரவதை அனுபவித்து வருவதற்கான முழுப்பொறுப்பையும் சுமந்திரன் ஏற்க வேண்டும். இந்த 5 முன்னாள் போராளிகளை மட்டுமல்லாமல் இலங்கைக்கு திரும்பியதும் கடத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட தமிழ் ஆர்வலர்களையும் சித்திரவதை செய்யப்படுவதற்கும் சுமந்திரனே உடந்தையாகிறார்.

சுருக்கமாகச் சொல்வதானால், சுமந்திரன் எப்போதுமே தனக்கும் அவரது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வாக்களித்த தமிழ் மக்களின் விருப்பங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் முரணாக செயல்பட்டு வருகிறார் என்பது வெளிப்படையானது. தனது சமீபத்திய நேர்காணலின் மூலம், ஏற்கனவே இழப்பின் வேதனையால் பாதிக்கப்பட்டு, நீதி இல்லாமல் விடப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் இதயங்களில் ஆறாத காயத்தையும் வலியையும் அவர் உருவாக்கியுள்ளார். தனது சொந்தக் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அவரும் அவரது கட்சியும் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களின் கருத்துக்களை மதிக்கத் தவறிவிட்டார். தனது சொந்த கருத்துக்களை ஒதுக்கி வைக்க இயலாமையை நிரூபிப்பதன் மூலம், அவர் தனது சொந்த மக்களை ஜனநாயக முறையில் பிரதிநிதித்துவப்படுத்தும் திறன் இல்லை என்பதை நிரூபித்துள்ளார். தனது சொந்த நிகழ்ச்சி நிரல்களையும் கருத்துக்களையும் விற்கும் ஒரு தளமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்த அவர் அனுமதிக்கப்படக்கூடாது. சுயேச்சையாக நிற்கவோ அல்லது தனது சொந்தக் கருத்துக்கள் அடிப்படையில் தனது சொந்தக் கட்சியை உருவாக்கவோ அவருக்கு முழுச் சுதந்திரமும் உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த தமிழர்களின் ஆணையை அவர் மதிக்க முடியாததால், அவர் உடனடியாக தனது பதவியை துறந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேற வேண்டும்.

அவரிடம் சுயகௌரவம் கொஞ்சமாவது எஞ்சியிருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரை நீக்குவதற்கு முன்பு அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும். தவறினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் ஆணைப்படி செயற்பட வேண்டும், அவரை கட்சியை விட்டு நீக்க வேண்டும் அல்லது தமிழர்களிடமிருந்து அவரது ஆதரவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழக்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா விளைவுகள் ?



■ நிலாந்தன்

வைரஸ் தொற்றின் விளைவாக அரசியலில் இரண்டு பிரதான விளைவுகள் ஏற்பட்டிருப்பதாக ஒரு பொதுவான கருத்து நிலவுகிறது. முதலாவது அதிகாரம் மையத்தில் குவிக்கப்படுவது. இரண்டாவது தேசியவாதத்தின் எழுச்சி. இவை இரண்டையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

முதலாவது அதிகாரம் மையத்தில் குவிக்கப்படுவது. வைரஸ் தொற்று ஐரோப்பாவை உலுப்பியபொழுது மொஸ்கோவில் நிலைகொண்டிருந்த ஒரு மேற்கத்தேய ராஜதந்திரி பின்வருமாறு தெரிவித்தார் வைரஸ் எதேச்சாதிகாரிகளுக்கு சுவர்க்கம் என்று. ஏனெனில் வைரசை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு எதேச்சாதிகாரத் தலைவர்கள் தங்களை மேலும் பலப்படுத்திக் கொள்வார்கள் என்ற பொருளில் தான் அவர் அவ்வாறு கூறினார்.

வரலாற்றில் அனர்த்தங்கள் அல்லது இயல்பற்ற காலங்களில் ஒரு சமூகத்தின் அச்சத்தையும் பாதுகாப்பின்மையையும் கெட்டித்தனமாக கையாண்டு எதேச்சாதிகாரிகள் தங்களைப் பலப்படுத்திக் கொள்வது உண்டு.

ஏனெனில் ஒரு பொது அச்சம் மேல் எழும் பொழுது ஏனையவை அதாவது ஜனநாயகம் மனித உரிமைகள் போன்றவை இரண்டாம் பட்சம் ஆகிவிடும். பசி வந்திட பத்தும் பறப்பது போல உயிர்ப் பீதி வந்துவிட்டால் உயிரை எப்படி பாதுகாக்கலாம்? எதைப் பலியிட்டுப் பாதுகாக்கலாம்? யாரிடம் தன்னைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைக்கலாம்? யார் தன்னை பாதுகாக்க கூடியவர்? ஒரு பொது எதிரியை இரும்புக்கரம் கொண்டு நசுக்கக்கூடிய இரும்பு மனிதர் யார்? என்றுதான் பொதுவாகச் சாதாரண ஜனங்கள் சிந்திப்பதுண்டு. இந்த அடிப்படையில் ஒரு உலக பெரும் தொற்று நோய் வேகமாகப் பரவியபொழுது மக்கள் மத்தியில் ஏற்பட்ட பாதுகாப்பின்மையை வெற்றிகரமாகக் கையாண்டு மக்கள் மத்தியில் ஏற்பட்ட பயப்பிராந்தியை வெற்றிகரமாகச் சுரண்டி அரசாங்கங்கள் அதிகாரத்தை மையத்தில் குவித்து கொள்ளும் என்று ஓர் எதிர்பார்ப்பு நிலவியது.நானும் கூட கொரோனா வைரஸ் ராஜபக்ஷக்களுக்கு விழுந்த ஒரு லொத்தர் என்று எழுதி இருக்கிறேன். ஆனால் கடந்த சுமார் ஆறரை மாத கால அனுபவம் நமக்கு கற்றுத் தந்தது எதுவெனில் வைரசை வெற்றி கொள்வதற்கு எதேச்சாரிகளை விடவும் ஜனநாயகத் தலைவர்களே அதிகம் பொருத்தமானவர்கள் என்பதே. கடந்த ஆறரை மாதங்களில் கோவிட் 19 ஐ வெற்றிகரமாக முறியடித்த நாடுகள் என்று தொகுத்துப் பார்த்தால் கிடைக்கும் புள்ளி விபரத்தின்படி பெருமளவுக்கு ஜனநாயக ரீதியாக தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்களே அதில் வெற்றி பெற்றிருக்கக் காணலாம். குறிப்பாக பெண் தலைவிகளைப் பெற்ற பல நாடுகள் கோவிட் 19 ஐமுன்னுதாரணமாகக் குறிப்பிடுமளவுக்கு வெற்றி கொண்டுள்ளன.

உதாரணமாக தாய்வான். அந்த நாட்டை சீனா எதிரியாகப் பார்க்கிறது. அந்த நாட்டை சீனா அங்கீகரிக்கவில்லை. எனவே உலக சுகாதார ஸ்தாபனம் தாய்வானை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கக் கூடாது என்று சீனா நிர்ப்பந்திக்கிறது. இதனால் உலக சுகாதார ஸ்தாபனம் தாய்வானில் இயங்குவதில்லை. எனினும் அந்த நாட்டின் பெண் பிரதமர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்பு உதவியின்றியே கோவிட் 19 ஐ வெற்றிகரமாக கையாண்டு இருக்கிறார்.

அதுபோலவே இந்திய சமஸ்ரிக் கட்டமைப்புக்குள்ளும் கேரளா மாநிலம் வைரஸை வெற்றிகரமாக முறியடித்தது. ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன் தாக்கிய நிபா வைரஸ் இலிருந்து பெற்ற படிப்பினைகள் காரணமாகவும் கேரளாவை ஆட்சி செய்யும் இடதுசாரி அரசாங்கத்தின் தீர்க்கதரிசனம்மிக்க பொருத்தமான நடவடிக்கைகள் காரணமாகவும் அம் மாநிலம் விரைவாக வைரஸை முறியடித்தது. இந்தியாவிலேயே வைரஸை விரைவாக முறியடித்த மாநிலமாக கேரளா காணப்படுகிறது.

அங்கேயும் சுகாதார அமைச்சராக இருப்பவர் ஒரு பெண்தான். எனவே சீனா, வடகொரியா போன்ற மிகச் சில உதாரணங்களை வைத்துக் கொண்டு வைரசை வெற்றி கொள்ள எதேச்சாதிகாரிகள் தேவை என்ற முடிவுக்கு நாங்கள் வரத் தேவையில்லை. தென்கொரியாவில் வைரஸை வெற்றிகரமாக முறியடித்த அரசாங்கம் மறுபடியும் தேர்தலில் அதுவும் கொரோனாக் காலத்தில் நடந்த ஒரு தேர்தலில் பெரும் வெற்றி அடைந்திருக்கிறது. வைரஸை எதிர்கொள்வதற்கு தென்கொரியா பின்பற்றிய சில நடவடிக்கைகள் குறிப்பாக நோய்த் தொற்றுச் சந்தேகநபர்களைப் பின்தொடர்ந்து சென்று கண்டுபிடிப்பதற்கு அந்நாடு அறிமுகப்படுத்திய சில இலத்திரனியல் நடைமுறைகள் ஜனநாயக விரோதமானவை என்று ஒரு விமர்சனம் உண்டு. அந்த நடைமுறைகளை அமெரிக்கா பின்பற்றவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எனினும் அவ்வாறான பின்தொடரும் தொழில்நுட்பத்தை கையாண்ட காரணத்தால் கோவிட்19ஐ பெருமளவுக்கு முறியடித்த பின் தென்கொரியா ஒரு சர்வாதிகார நாடாக மாறிவிட்டது என்று யாரும் கூற முடியுமா? எனவே இங்கு வெற்றியை தீர்மானிப்பது தலைவர்களின் அரசாங்கங்களின் தீர்க்க தரிசனம் மிக்க நடவடிக்கைகளும் ஒருங்கிணைந்த செயற்பாடும் தான். மாறாக வைரஸை முறியடிப்பதற்கு ஓர் எதேச்சாதிகாரி தேவையில்லை என்பதே கடந்த ஆறரை மாத கால அனுபவமாகும்.



இதில் உண்மை என்னவென்றால் ஏற்கனவே எதேச்சாதிகாரிகளாக இருந்த அரசியல் தலைவர்கள் வைரஸை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு மத்தியில் அதிகாரத்தை குவித்து விட்டார்கள் என்பதுதான். உதாரணம் ஸ்ரீலங்கா, ரஷ்யா.

எனவே வைரஸின் விளைவாக உலகில் எதேச்சாதிகாரத் தலைவர்கள் மேலெழுவார்கள் என்பதோ அல்லது அதிகாரம் மையத்தில் குவிக்கப்படும் என்பதோ ஒரு பொதுவான தோற்றப்பாடு அல்ல. ஒரு வைரஸ் தொற்று காலமானது அதிகாரப் பரவலாக்கத்தைக் கேட்கும் தரப்புக்களுக்கு சாதகமற்ற ஒரு சூழலை உருவாக்கியுள்ளது என்பதே உண்மை.

இரண்டாவது விளைவு தேசியவாதத்தின் எழுச்சி. வைரஸ் தொற்றுவதைக் கட்டுப்படுத்துவதற்காக நாடுகள் தமது தேசிய எல்லைகளை மூடின. ஆனால் தேசிய எல்லைகளை மூடிய எந்த ஒரு நாடும் வெளிநாட்டு உதவிகளைப் பெறாமல் வைரஸை எதிர்கொள்ளவில்லை. அதாவது தேசிய எல்லைகளை மூடுவது என்பது வெளிநாடுகளிலிருந்து உதவிகளைப் பெறாமல் விடுவது அல்ல. எனவே ஒரு நாடு தனது தேசிய எல்லைகளை மூடி தனது தேசிய வளங்களை மட்டும் பயன்படுத்தி வைரஸை எதிர்கொண்டது என்று கூறுவது பொருத்தமானது அல்ல. தேசிய எல்லைகளை மூடுவதால் தேசியவாதம் பலம்பெற்றுவிட்டதாகவும் அர்த்தமில்லை.

அது போலவே நோயச்சத்துக்கு எதிராக மக்களைத் திரட்டுவதும் தேசியவாதம் அல்ல. ஒரு பேரச்சத்தை காரணமாக வைத்து மக்களை திரளாகக் கூட்டுவதை தேசியவாதம் என்று அழைக்க முடியாது. அது தேசியவாதம் அல்ல. இன்னும் ஆழமாகச் சொன்னால் கண்ணுக்குத் தெரியாத ஓர் எதிரிக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டுவதை தேசியவாதம் என்று அழைக்க முடியாது. அச்சத்துக்கு மறு பெயர் தேசியவாதம் அல்ல.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான கேள்வியை கேட்க வேண்டும். நாங்கள் தேசியவாதம் என்று எதைக் கருதுகிறோம் ?

ஒரு நாடு அதன் தேசிய வளங்களில் மட்டும் தங்கியிருப்பதையா? ஆல்லது ஒரு பேரச்சத்தை முன்னிறுத்தி மக்களை ஒன்று திரட்டுவதையா? நிச்சயமாக இல்லை. தேசியவாதம் எனப்படுவது அதைவிடப் பரந்தகன்ற தளத்தில் ஆழமான பொருளைக் கொண்டது. தேசம் எனப்படுவது ஒரு பெரிய மக்கள் திரளாகும். தேசியம் எனப்படுவது மக்களை ஒரு பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது. எந்த அடிப்படையில் மக்களைத் திரட்டுவது? ஒரு வைரஸ் பற்றிய பயத்தின் அடிப்படையிலா ? இல்லை. ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது மக்களை திரளாக்கவேண்டும். ஏனெனில் தேசியத்தின் உள்ளடக்கம் ஜனநாயகம் ஆகும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால். கொரோனாக் காலத்தில் தேசியவாதம் அதன் மெய்யான பொருளில் எழுச்சி பெறவில்லை. மாறாக குருட்டுத் தேசியவாதமே எழுச்சி பெற்றுள்ளது. அது ஒரு கண்ணுக்குத் தெரியாத வைரசுக்கு எதிரான அச்சத்தின் மீது கட்டப்பட்ட திரளாக்கம். வைரஸை சாட்டாகவைத்து அதிகாரத்தை மையத்தில் குவிக்க விரும்பிய அரசாங்கங்கள் தேசியவாதம் என்ற முகமூடியை எடுத்து அணிந்து கொண்டன என்பதே சரி. தேசிய வாதம் ஏன்பது ஜனநாயகத்தை உள்ளடக்கமாகக் கொண்டது. மாறாக மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து மத்தியில் குவித்துக் கொள்வது எதேச்சாதிகாரம். அது தேசியவாதத்துக்கு எதிரானது.

எனவே வைரஸின் விளைவாக தேசியவாதம் எழுச்சி பெறவில்லை. ஏற்கனவே இருந்த எதேச்சாதிகார அரசாங்கங்கள் வைரஸை சாட்டாகவைத்து அதிகாரத்தை மையத்தில் குவித்துக்கொண்டன ஒரு பொது அச்சத்துக்கு எதிராக மக்களைத் திரட்ட தேசியவாதத்தை ஒரு முகமூடியாக அணிந்து கொண்டன என்பதே சரியானதாகும்.

அதேசமயம் இப்போக்கானது மெய்யான தேசியவாத சக்திகளுக்கும் மத்தியில் அதிகாரத்தை குவிக்கும் ஒற்றையாட்சி முறைமையை எதிர்த்துப் போராடும் சக்திகளுக்கும் நெருக்கடிகளை அதிகப்படுத்தியிருக்கிறது என்பதும் உண்மை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜா ஹரன்

# உயிர்களை காக்க ஒரு துளி






உலகில் இதுவரை குருதிக்கு இணையான எந்த ஒரு திரவமும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.குருதிக்கு இணையானது குருதி மட்டுமே, அவசர உலகத்தில் அறுவைச் சிகிச்சையும் விபத்தும் நோயும் மலிந்து விட்டன. விபத்தில் அடிபட்டு இரத்தம் தேவைப்படுவோர் ஏராளம்ஏராளம். எதிர்பாராத விபத்து, மகப்பேறு, அறுவை சிகிச்சை, நோய்ப்பலவீனம் ஆகியவற்றின்போது பாதிக்கப்பட்டவருக்கு இரத்தம் தேவைப்படுகிறது.

உலகளவில் இரத்தத்தின் தேவை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. தேவைப்படும் இரத்தத்தை இன்னொருவர் தானம் செய்வதன் மூலம் மட்டுமே தேவைப்பாட்டை ஓரளவாவது பூர்த்திசெய்ய முடியும்..

முகமும் முகவரியும் தெரியாத இவர்களுக்கு நம்மால் எப்போதும் செய்ய முடிகிற கொடுத்தாலும் குறையாத தானம் இரத்ததானம்.

உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் ஜுன் மாதம் 14ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் உலக சுகாதார நிறுவனத்தால் சர்வதேச இரத்த தான தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. (ஆயினும் ஒக்டோபர் 01ஆம் திகதி தேசிய இரத்த தான தினமாக இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகிறது

இரத்தப் பிரிவுகளான A, B ,AB, O ஆகிய பிரிவுகளைக் கண்டுபிடித்த கார்ல் லென்டினரின் (Karl Landsteiner) பிறந்த தினத்திலே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது..

உலக ரீதியில் இத்தினத்தை அனுஷ்டிப்பதற்கான முக்கிய நோக்கம் இரத்த தானம் வழங்குபவர்களை கௌரவப்படுத்துவதும் இரத்ததானம் செய்வதனை ஊக்குவிப்பதுமேயாகும். எனினும் இரத்தத்துக்குப் பதிலீடாக இதுவரை எந்ததிரவமும் இதுவரை கண்டுபிடிக்கப்படாமை நவீன விஞ்ஞான வளர்ச்சியின் தோல்வியாகவே கருத முடியும்.

இரத்ததானம் என்பது இன்னொருவருக்கு ஏற்றுவதற்காக இரத்தத்தை வழங்குவதை பொருள்படுத்தி நிற்கின்றது. தானத்தின் மூலம் சகல இரத்த வழங்குநரும், பெறுநரும் இதன் பிரதிபலன்களை அவர்களுடைய வாழ்நாளிலேயே அனுபவிக்கிறார்கள். அத்துடன் அனைவருக்கும் பொதுவான இரத்த தானத்தின் மூலம் இன, மத, மொழி, நிற, பேதங்களை மறந்து அனைத்து மக்களும் ஒருவருக்கொருவர் உதவ முடியும்.

ஒருவரினால் வழங்கப்படும் இரத்தத்தின் மூலம் தலசீமியா, ஹிமோபிலியா, டெங்கு போன்ற இரத்தம் சம்பந்தமான நோயாளிகளும், சத்திர சிகிச்சைகளுக்கு உட்படுவோர், மகப்பேறு அடையும் தாய்மார், அவசர விபத்துக்குள்ளாவோர் என உலகம் முழுவதுமுள்ள இலட்சக் கணக்கான மக்களும் தமது உயிரை மீளப் பெறுகின்றனர்.

இந்தத்தினம் இலவச இரத்த தானம் செய்வதன் முக்கியத்துவத்தினை உணர்த்துவதோடு இலவச இரத்த தானம் வழங்குவோரை பாராட்டுவதாகவும் அமைகின்றது. இந்தத்தினத்தினை பரவலாக அனுஷ்டிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இரத்தானம் செய்வோரை ஊக்குவிக்கும் நல்லதொரு வாய்ப்பாகவும் இது அமைகின்றது.

உலக சுகாதார நிறுவன அறிக்கையின் பிரகாரம் உலக சனத்தொகையில் ஒரு வீதத்துக்கும் குறைவானவர்களே இரத்த தானத்தை வழங்குவதாக பதிவேடுகள் சொல்கின்றன. வருடாவருடம் பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் 81 மில்லியனுக்கும் கூடிய அலகுகளை இரத்த தானமாக வழங்கி வருகின்றனர். உலக மக்கள் வழங்கும் இரத்த தானம் ஆண்டுதோறும் 81 மில்லியன் அலகுகளுக்கும் அதிகமாக இருந்த போதிலும் இதில் 38 வீதமான பங்களிப்பே வளர்முக நாடுகளில் வழங்கப்படுகின்றது. ஆனால் உலக சனத்தொகையின் 82 வீதமானோர் வளர்முக நாடுகளில் வாழ்கின்றனர்.

இரத்த தானம் செய்வதன் மூலம் ஒருவருடைய உயிர் காப்பாற்றப்படுகிறது. இன்னொருவருக்கு இரத்த தானம் செய்ய வழிகாட்டியாக அமைகிறது. இன்று நீங்கள் இரத்த தானம் செய்தால்,அது நாளை உங்களுக்குக் கூட பயன்படலாம்.

இலங்கையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்ட இரத்த தான அமைப்பு, அருங்குருதியாளர் அமைப்பு ஆகியன இயங்கி வருகின்றன. அருங்குருதி வகையைச் சேர்ந்தோர் தங்களை இந்த அமைப்பில் இணைத்துக் கொள்வதானது அவசர அருங்குருதித் தேவைப்பாட்டை நிறைவுசெய்து உயிர் காப்பாற்ற உதவும்.

ஒவ்வொருவரும் தத்தமது இரத்தவகை என்ன? என்பதைத் தெரிந்து வைத்திருப்பதோடு இது பற்றிய விபரங்களைச் சொல்லும் அட்டையையும் தங்களுடனேயே எங்கு செல்லும்போதும் வைத்திருக்க வேண்டும். சாரதி அனுமதிப் பத்திரத்தில் இது பற்றிய விபரம் இருக்கிறது. குடும்பமொன்றிலுள்ள ஒவ்வொருவரும் தங்களுடன் இந்த குருதி அடையாள அட்டையை எந்நேரமும் வைத்திருக்க வேண்டும். பிரயாணம் செய்யும்போது தன்னுடன இந்த அட்டை இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக மாணவர்கள் பாடசாலை செல்லும்போதும் பாடசாலைவிட்டு வரும்போதும் தங்களுடன் இந்த அட்டையை வைத்திருப்பதுடன் தங்களது பதிவுப்புத்தகத்தில் குறித்தும் வைத்திருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**இரத்த தானம் செய்வோர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்**

- உடல் ஆரோக்கியம் இருக்க வேண்டும்.
- வயது 18 முதல் 60 வரை இருக்க வேண்டும்.
- உடலின் நிறை 50 கிலோவுக்கு மேல் இருக்க வேண்டும்.
- உடலின் வெப்பநிலை 37.5 டிகிரி செல்சியசுக்கு கூடாமல் இருக்க வேண்டும்.
- நான்கு மாதத்துக்கு ஒரு முறை இரத்த தானம் செய்யலாம்
- சாதாரணமாக 350 மி..லீ இரத்தம் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும்.

சாதாரண எடையுள்ள ஒரு ஆரோக்கியமான மனிதனின் உடலில் 5 முதல் 6 லீற்றர் இரத்தம் உள்ளது. அதில், இருந்து வெறும் 300 முதல் 450 மில்லிலீற்றர் (ஒரு யூனிட்) இரத்தம் மட்டுமே தானத்தின் போது பெறப்படும். அவ்வாறு கொடுத்த இரத்தத்தின் அளவு இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் சாதாரண உணவிலேயே மீண்டும் உற்பத்தியாகிவிடும்.

இதேவேளை இரத்த தானம் செய்வதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பு வரை எந்த போதைப்பொருளையும் எடுத்திருக்கக்கூடாது. சர்க்கரை நோய் சகரோகம் எய்ட்ஸ் போன்று இரத்தத்தின் மூலம் பரவக்கூடிய நோய்கள் இருக்கக்கூடாது. மேலும் 3 ஆண்டுகளில் மஞ்சள் காமாலை நோய் தாக்கியிருக்கக்கூடாது.

4 மாதங்களுக்கு ஒரு முறை எந்தவித பாதிப்பும் இன்றி இரத்த தானம் செய்யலாம். இரத்த தானம் செய்வதற்கு 10 20 நிமிடங்கள் போதும். பொதுவாக 17 - 60 வயதுக்கிடைப்பட்ட சுகதேகிகளால் இரத்ததானம் செய்யமுடியும். இரத்த தானம் செய்ய முற்படும் ஒருவர் 50 கிலோகிராம் எடையிலும் அதிகமாக இருக்க வேண்டும். இரத்த தானம் அளிப்பதால் நமது உடலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. சொல்லப்போனால் நமது உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாகும். அது உடலுக்கு நன்மையாகத்தான் அமையும். தானமாக அளித்த இரத்த அளவை, நமது உடல் 24 முதல் 48 மணி நேரத்திற்குள் மீண்டும் உற்பத்தி செய்துவிடும். இரத்த தானத்தின் போது நாம் இழக்கும் சிவப்பணுக்களின் எண்ணிக்கை 56 நாட்களிலேயே சீராகி விடும்.

இரத்த தானம் அளிப்பதற்கு எந்தவிதமான உணவுக் கட்டுப்பாடோ, மருந்தோ தேவையில்லை. உடலில் இருந்து இரத்தம் எடுக்க 5 அல்லது 10 நிமிடங்கள் மட்டுமே ஆகும். ஆனால் இரத்த தானம் அளித்த பிறகு 10, 15 நிமிடங்கள் ஓய்வெடுக்கச் சொல்லி பிறகுதான் அங்கிருந்து அனுப்புவார்கள். எனவே மொத்தமாகவே இரத்த தானம் அளிக்க 30 நிமிடங்கள் போதும். இரண்டு நாட்களில் இழந்த இரத்தத்தை மீட்டு விடலாம். இரண்டு மாதங்களில் சிவப்பணுக்களின் எண்ணிக்கை சரியான அளவுக்கு வந்துவிடும். இரத்தம் வழங்குவதால் மற்றவர் பயன்பெற்றாலும் தானம் செய்பவர்களுக்கும் பலன் அளிக்கிறது. புதிதாக இரத்தத்தை உருவாக்கும் முயற்சியாகவும் இதைக் கருதலாம். இதனால் தானம் செய்த இரத்தத்தை இழந்ததாகக் கருத வேண்டியதில்லை. இரத்தத்தில் இரும்புச் சத்தை சரியான அளவில் வைத்துக் கொள்ள தானம் உதவுகிறது.

**உலக இரத்தான தினத்தின் பிரதான குறிக்கோள்கள்**

- எந்தவொரு வெகுமதியோ அல்லது ஊதியமோ இன்றி ரத்த தானத்தை வழங்குவோருக்கு நன்றி செலுத்துதல்.
- நெருக்கடியான சூழ்நிலையில் உயிர்காக்கும் விலைமதிப்பற்ற வளத்தினை ஒழுங்காக வழங்கும் அற்புதமான விசேடமான தொண்டர்அணியைச்சேர்ந்தவர் என்ற மனநிலையை இரத்த தானம் புரிவோருக்கு ஏற்படுத்துதல்.
- சுகதேகியாக உள்ள நண்பர்களையும், உறவினர்களையும் எவ்வித வெகுமதியோ அல்லது ஊதியமோ இன்றி இரத்ததான நடவடிக்கைகளில் பங்கேற்க ஊக்கமளித்தல்.
- ஒரு குடும்ப அங்கத்தவருக்கு இரத்தம் தேவைப்பட்ட சந்தர்ப்பத்தில் இரத்த தானம் செய்தவரை தொடர்ந்தும் இத்தகைய தொண்டர் பணியில் ஈடுபட ஊக்குவித்தல்.
- இரத்த தானம் செய்வோருக்கு எவ்வாறு சுகமான வாழ்வினை மேற்கொள்ள முடியும் எவ்வாறு தமது இரத்தத்தை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்பது பற்றி அறிவுறுத்துதல்.
- உலக இரத்த தான இயற்கை நிகழ்ச்சிகள் பற்றிய ஆர்வத்தைத் தூண்டுதல்.

எனவே இரத்த தானம் என்பது நாங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.இரத்த தானம் என்பது ஒரு உயிரைக் காக்க நாங்கள் வழங்கும் பங்களிப்பு. இந்த உணர்வினை இத்தினத்தில் உறுதியாக எமது மனங்களில் பதித்து வாழ்நாளில் ஒருதடவையேனும் குருதித் தானம் செய்வோம் இதனை உறுதி கொள்வோம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
15 . 05 . 1950

மறைவு
14 . 05 . 2020

## அமரர் துரையப்பா கனகசுந்தரம்

*ஐயா! உங்கள் பாசம் மிகுந்த முகத்தைப் பார்க்காமலும்
கனிவு நிறைந்த குரலைக் கேட்காமலும் கடந்த 31
நாட்களாக எல்லோரும் ஏங்கித் தவிக்கின்றோம்.
எங்களுடன் நீங்கள் வாழ்ந்த நாள்கள்
மீண்டும் வரதா என்று தினமும்
கண்கலங்கித் தேடுகின்றோம்.*

கடந்த (14.05.2020) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.**


**மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
077 373 9982**

(CS 30270(04.17)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
11 . 01 . 1939

இறப்பு
17 . 05 . 2020



கடந்த 17.05.2020 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் திரு. வ.முருகேசு

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்- வலிவடக்கு)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (16.06.2020) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தந்தையின் இறப்புச் செய்தி அறிந்து, நேரில் வருகை தந்து எமது துன்பத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலிகளை செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி, சமூக வலைத்தளங்களூடாக ஆறுதல் கூறியவர்களுக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



திருமதி

## புவனேஸ்வரி (பூம்பதம்) இரத்தினசிங்கம் (S.R)

**தோற்றம் :- 11.01.1931** **மறைவு:-11.06.2020**

பங்களா வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், W.A.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி- இரத்தினசிங்கம் கடந்த (11.06.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-கண்மணிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லாச்சி தம்பதி யரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் (சுன்னாகம்) இரத்தின சிங்கத்தின் (S.R) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற புஸ்பநாதன் மற்றும் வாசுகி (ஓய்வுபெற்ற இலிகிதர், தேசிய வீடமைப்பு திணைக்களம்-கொழும்பு), வதனி (அனுராதபுரம்), யோகநாதன் (நோர்வே), செந்தில்நாதன் (சுவிஸ்), வனஜா (கனடா), வரதா (அவுஸ்திரேலியா), வசிகலா (சுவிஸ்), ஜெகநாதன் (சுவிஸ்), இராஜகருணைநாதன் (சுவிஸ்), வாணிலேகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான வர்த்தகர் தம்பிஜயா, மகேஸ்வரி, செல்வராணி, பரமேஸ்வரி, இராமநாதன், சிதம்பரநாதன் மற்றும் ஞானேஸ்வரி, புஸ்பராணி, இரங்கநாதன் காலஞ்சென்ற பவளராணி மற்றும் சிவலிங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவலோஜினி, தேவானந்தன் (ஓய்வுபெற்ற கணக்காளர், தேசிய வீடமைப்பு திணைக்களம்), நிஜாம், பாமினி, விமலேஸ்வரி, குருகுலசிங்கம், சிறிகரன், யோகராஜா, மணிமேகலா, றஜினி, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலகுமார், விஜிதா, லாவண்யா, மிராஜ், சுரேன், மிதிலன், நிரோசா, நிவ்ரான், நிசாந், நிஸ்லா, நிவ்லா, இதிகாசன், யாசுதன், யெனுதிகா, றிஜிதா, றினோதா, றெமோநாத், ஆர்த்தி, ஆதித்தன், அசோக், சாம்பவி, ஜனார்த்தனன், துவாரகா, றிசாந்தன், ஜெஷாணி, ஜெஷின், றணோஸ், ஜெனிக்கா, கிஷோன், கவினாஸ், அவினாசினி ஆகியோரின் அருமை பேர்த்தியும், விசால், கிரிஷா, யாதவ், இல்காம், இமாத், அப்துல்லா, அர்ச்சுனா, ஆரான், சோண், சணயா, ஜெடன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பங்களா வீதி, மல்லாகத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.30 மணியளவில் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பங்களா வீதி,
மல்லாகம்.**

**தகவல் :
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பௌத்த சிங்கள மக்களின் முழு ஆதரவுடன்தான் ஜனாதிபதிக் கதிரையில் கோத்தாபய அமர்ந்தார்.
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம்களின் வாக்குகள் 'தாமரை மொட்டு' சின்னத்துக்கு அளிக்கப்படக்கூடாது என்பதிலும், அந்த வாக்குகள் 'அன்னம்' சின்னத்துக்கே அளிக்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரதான முஸ்லிம் கட்சிகளும் விடாப்பிடியாக நின்றன. இறுதியில் அந்தக் கட்சிகள் தாம் நினைத்ததை சாதித்தன.
ஆனால், 'அன்னம்' சின்னத்துக்கு வாக்களித்து சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்க முயன்ற தமிழ், முஸ்லிம்கள் இறுதியில் ஏமாற்றமே அடைந்தனர்.
எனவே, தமிழ், முஸ்லிம் மக்கள் இந்தப் பொதுத்தேர்தலில் சிங்கள மக்களுடன் ஒன்றிணைந்து சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் 'மொட்டு' சின்னத்துக்கு வாக்களிக்க அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ், முஸ்லிம் மக்கள் சரிவரப் பயன்படுத்த வேண்டும்.
ராஜபக்ஷக்களின் இந்த ஆட்சியில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் நாம் செயற்படுவோம்-என்றார். (ஓ,5,22)

## தளர்கிறது...

மணி வரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மறு அறிவித்தல் வரை இந்த நடைமுறை பின்பற்றப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
தற்போது இரவு 11 முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஊரடங்கு நேரம் நடைமுறைப்படுத்தப்படும் காலம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது. (எ-22)

## 39 கிலோ...

னர்.
கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சோதனை நடவடிக்கைகளை கடற்படையினர் முன்னெடுத்தனர். இதன்போதே சந்தேகத்துக்கிடமான படகை அவர்கள் சோதனை செய்தனர்.
படகிலிருந்து 39 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மற்றும் மாதகலைச் சேர்ந்த 33 மற்றும் 32 வயதுடைய இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ,5,26)

## லீசிங்...

யப்பட்டதாக, குத்தகை நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை மறுஅறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனவும், பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக குத்தகை கடன் தவணைகளை ஆறு மாதங்களுக்கு ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி செயலரின் கையொப்பத்துடன், கடந்த மார்ச் 23 ஆம் திகதி சுற்றறிக்கை வெளியிடப்பட்ட நிலையில், கடன் தவணைகளை செலுத்தத் தவறிய வாகனங்களை பறிமுதல் செய்வது அரசின் உத்தரவை மீறும் செயல் எனவும், ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.
கடன் தவணைகளை செலுத்தத் தவறும் பட்சத்தில் வாகனங்களை பறிமுதல் செய்ய இடமளிக்க வேண்டாம் என்றும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பொலிசாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.
லீசிங் நிறுவனங்கள் வாகனங்களை பறிமுதல் செய்வது தொடர்பான விவகாரத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக, முச்சக்கர வண்டிச் சங்கத் தலைவர் லீசிங் நிறுவனத்தினரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றிருந்த நிலையிலேயே, ஜனாதிபதி மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளார். (ஓ,5)

## பீடியால்...

சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த செந்தில்நாதன் சர்வேஸ்வரன் (வயது-28) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கந்தரோடையில் விவசாயம் செய்து வரும் இளைஞன் கடந்த 31 ஆம் திகதி தோட்டத்துக்கு நீர் இறைப்பதற்காக நீர் இறைக்கும் இயந்திரத்தை தோளில் சுமந்து சென்றுள்ளார். இயந்திரத்தில் இருந்த மண்ணெண்ணெய் அவரது உடலில் பட்டுள்ளது. பின்னர் தோட்டத்தில் பீடி புகைத்துக் கொண்டு பெற்றோலை பயன்படுத்தி நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கி உள்ளார். எதிர்பாராத விதமாக அவரது உடலில் தீப் பரவல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் கூக்குரல் எழுப்பியவாறு கிணத்திற்குள் குதித்துள்ளார். அவ்வாறு குதித்தவரை அயலில் உள்ளவர்கள் உடனடியாக மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர்.
எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். இறப்பு தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஓ,5,20,26)

## பரந்தனில்...

கப்பட்டுள்ளன. கடைகளில் இருந்த சிகரெட், பீடி உள்ளிட்ட பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-6)

## யாழ்ப்பாணத்தில்...

கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகளுமே விதிமுறை மீறல் தொடர்பான முறைப்பாடுகளாகவே உள்ளன. (ஓ,5,105)

## கொள்ளையன்...

சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.
சாவகச்சேரி மத்திய பேருந்து நிலையத்துக்கு அண்மையில் உள்ள வீட்டில், பேருந்தில் பயணிப்பவர்கள் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி விட்டுச் செல்வது வழமை. நேற்றைய தினமும் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு, வீட்டுக்குள் ஒருவர் பிரவேசித்துள்ளார். வீட்டிலிருந்த கைத் தொலைபேசியைக் கொள்ளையிட்டுள்ளார். வீட்டிலிருந்த பெண் அவரைக் கண்டுள்ளார். உடனே பெண்ணின் தலையில் பலமாகத் தாக்கி விட்டு தப்பித்துக் கொள்ளையன் ஓடியுள்ளான். காயமடைந்த பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஓ,5)

## இந்தியா...

கள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
இந்தியாவிலிருந்து புடைவை வியாபாரம் செய்வதற்கு இணுவில் பகுதியில் மூன்று மாதங்கள் தங்கியிருந்தவர், கடந்த 31ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவருக்கு இந்தியாவில் கடந்த 3ஆம் திகதி நடத்தப்பட்ட கொரோனா தொற்றுச் சோதனையில் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இது தொடர்பான தகவல் இந்தியத் தூதரகம் ஊடாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டது. இதனையடுத்து இந்தியப் புடைவை வியாபாரியுடன் நெருக்கமாகப் பழகிய குடும்பங்கள் சில இணுவில் மற்றும் ஏழாலையில் தனிமைப்படுத்தப்பட்டன.
இந்தியாவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்கு கடந்த 9ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் அவர் வீடு திரும்பியுள்ளார் என்று மருத்துக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டார். (ஓ,5)

## ஆலயத்தில்...

று சனிக்கிழமை கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் சங்கிலி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.
மானிப்பாய் - சங்கானையை சேர்ந்த நபர் ஒருவரே மந்துவில் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று மந்துவிலை சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் சந்தேகத்தில் கைதாகி, அவர் சம்பவத்தில் தொடர்பற்றவர் என்பது உறுதி செய்யப்பட்டு பதில் நீதிவான் முன்பு முன்னிலைப்படுத்தி சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.
இந்த நிலையில் ஆலயத்தில் திருடும் போது சி.சி.ரி.வி. காணொலியில் தென்பட்ட நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஆலயத்தின் சங்கிலி, 40 ஆயிரம் பணம் மற்றும் ஐம்பொன்னாலான கலசம் உட்பட ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தது. அவற்றில் சங்கிலி மீட்கப்பட்டுள்ளது. (ஓ,5,159)

## சுமந்திரனால்...

97 அரசியல் கைதிகளே தடுப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராலும், ஈ.பி.டி.பி.யினராலும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் 106 அரசியல் கைதிகள் தற்போது தடுப்பில் உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீது தாக்குதல் நடாத்த சதியில் ஈடுபட்டதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 15 முன்னாள் போராளிகள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
சிறையிலும் தடுப்புக் காவலிலும் தடுத்தும், அடைத்தும் வைக்கப்பட்டிருக்கும் தண்டனை விதிக்கப்பட்ட, வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும், மற்றும் விளக்கமறியல் கைதிகளுமாக 91 அரசியல் கைதிகளாகயிருந்த எண்ணிக்கை, கொரோனா காலத்தில் சுமந்திரன் கொலை முயற்சி தொடர்பில் கைது செய்யப்பட்ட 15 கைதிகளுடன் சேர்த்து தற்போது 106 கைதிகளாகியுள்ளனர்.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீது தாக்குதல் நடத்த சதியில் ஈடுபட்டதாக 2017ஆம் ஆண்டு தை மாதம் 13ஆம் திகதி ஐந்து முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அண்மையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 15 கைதிகளுடன் மொத்தமாக 20 அரசியல் கைதிகள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீது தாக்குதல் நடாத்த சதி செய்ததாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வர் அங்கவீனர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

## தீயில்...

தாபமாக உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி ஜெயபுரம் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார் கிருஸ்ணவேணி(வயது-28) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.
பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையில் அண்மைக் காலமாக முரண்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த 5 ஆம் திகதி குடும்பப் பெண் தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டி தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். தீக்காயத்திற்குள்ளான அவரை உடனடியாக முழங்காவில் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஓ,5,20,26)

## தேர்தலுக்கு...

கள், ஏமாற்றுக்கள், குழிபறிப்புக்கள் ஆகியவற்றுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து தமிழ் தேசிய அரசியலை வெற்றிபெறச் செய்யும் தனது அரசியல் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை நல்குமாறு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
மிகுந்த நிதி நெருக்கடியின் மத்தியில் அனாவசியமான செலவுகளை தவிர்த்து எதிர்வரும் தேர்தலை முற்றுமுழுதாக மக்களை நம்பி எதிர்கொள்வதாக தெரிவித்துள்ள அவர், சில அவசியமான செலவுகளை செய்வதற்கான நிதி உதவிகளை முடிந்தளவு செய்துதவுமாறு நிலத்திலும் புலத்திலும் உள்ள மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். மக்கள் அளிக்கும் எந்த ஒரு சத பணமும் அனாவசியமான முறையில் செலவு செய்யப்படாது என்றும், ஒவ்வொரு சதத்துக்கும் கணக்கு காட்டப்படும் என்றும் குறிப்பிட்டுள்ள விக்னேஸ்வரன், தனது வங்கி கணக்குகளை தெரியப்படுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (ஓ,5)

## பரீட்சார்த்த...

டுகின்றது.
நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஒத்திகை பல இடங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்குரிய பரீட்சார்த்த தேர்தல் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் இன்று காலை 10 மணியிலிருந்து 12 மணி வரையில் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கு 23 அங்குலம் நீளமான வாக்குச் சீட்டு பயன்படுத்தப்படவுள்ள நிலையில், இன்றைய பரீட்சார்த்த தேர்தலிலும் 23 அங்குல நீளமான வாக்குச் சீட்டு பயன்படுத்தப்படவுள்ளது. (ஓ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவுடன் இணைய மங்களவுக்கு அழைப்பு

கொழும்பு,ஜூன் 14

**மங்கள சமரவீர அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வு பெறப்போவதாகத் தெரிவிக்கவில்லை. அவர் பொதுத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றே கூறியுள்ளார். அவருடைய தனிப்பட்ட தீர்மானத்துக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். அதேவேளை அவர் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும், அரசியலில் தொடர்ந்தும் எமது கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும்.**



இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார். ஐக்கியதேசியக்கட்சியின்தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுத் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி புதிய உத்வேகம் பெற்றுள்ளது. கட்சி அலுவலகத்தின் வளாகத்தில் கடந்த மார்ச் 19 ஆம் திகதி காணப்பட்ட நிலை தற்போது இல்லை. கட்சியின் ஆதரவாளர்கள் நிறைந்திருக்கிறார்கள்.

பாரம்பரியம் மிக்க ஐக்கிய தேசியக் கட்சி அழிந்து இல்லாமல் போவதற்கு இடமளிக்க முடியாது என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். கடந்த காலங்களில் நாட்டில் பெருமளவான அபிவிருத்தியை ஏற்படுத்தியதும், மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கியதும் ஐக்கிய தேசியக் கட்சி என்பதைப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

மங்கள சமரவீர ஒரு சிறந்த புத்திஜீவி. ஜனநாயகத்தை மேம்படுத்துவதை முன்நிறுத்திய அவரது கருத்துக்களை வெளிப்படையாகவே தெரிவித்து வந்திருக்கிறார். அதுமாத்திரமன்றி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து நீண்டகாலம் மக்களுக்காக முன்நின்று செயற்பட்டிருக்கிறார். அவர் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும், அரசியலில் தொடர்ந்தும் எமது கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரை தற்போது தொலைபேசி மணி ஒலிப்பது நின்றுவிட்டது போல் தெரிகிறது. பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் கையெழுத்திட்ட சிலர் தற்போது அதிலிருந்து விலகியுள்ளனர் என்று அறியமுடிகிறது.

ஆனால் எமது கட்சியில் அத்தகைய நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய விரும்புபவர்களுக்கு உறுப்புரிமையை வழங்காமலிருக்கும் அவசியம் இல்லை - என்றார். (க)

# கணக்குக் காட்டாவிட்டால் பதவியை விட்டு விலகுக!

## சுகாதார அமைச்சரை சாடுகிறார் ஆசுமாரசிங்க

கொழும்பு,ஜூன் 14



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஏனைய வெளிநாடுகளிலிருந்து வழங்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி விளக்கமளிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய செயற்படுவதற்காக மாத்திரம் சுகாதார அமைச்சர் பதவி வகிக்க வேண்டிய அவசியமில்லை. எங்களது கேள்விகளுக்கு பதில் வழங்க முடியாதுஎன்றால்அவர்அமைச்சு பதவியை துறக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக 42.6 பில்லியன் ரூபாய் நிதி நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த நிதிகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை. இந்த நிதிகளை சுகாதாரப் பிரிவுக்கோ அல்லது அரசாங்கத்தின் ஏனைய செயற்பாடுகளுக்காகவோ பயன்படுத்தியிருந்தால் அது தொடர்பான உண்மைத் தகவல்களை சுகாதார அமைச்சர் தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வளவு நிதி கிடைக்கப்பெற்றுள்ளபோதிலும் இன்னமும் வைரஸ் பரவலை கண்டறிவதற்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் அதிகரிக்கப்படவில்லை. நாளொன்றுக்கு 5 ஆயிரம் பரிசோதனைகளை நடத்த வேண்டும் என்று நாங்கள் தெரிவித்து வருகின்ற நிலையிலும், அது தொடர்பில் சுகாதார அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளதாக தோன்றவில்லை.

சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் அனில்ஜாசிங்கவின் ஆலோசனைக்கமையவே தான் செயற்பட்டு வருகிறார் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். பணிப் பாளரின் ஆலோசனைக்கமைய மாத்திரம் செயற்படுவதற்காக எமக்கு அமைச்சர் ஒருவர் தேவையில்லை. வைரஸ் தொற்று நிலைமையைத் தன்னால் ஒழுங்கான முறையில் கையாள முடியவில்லை என்றால் அவர் அமைச்சு பதவியைத் துறக்கவேண்டும். கடந்த காலங்களில் இது போன்று பலர் தங்களது பதவிகளைத் துறந்து முன்மாதிரியாக செயற்பட்டுள்ளனர். அந்த கலாசாரத்தை நாம் தொடர்ந் தும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து மாத்திரம் 230 மில்லியன் நிதி கிடைத்துள்ளது. இந்த நிதிக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலாவது அவர் விளக்கமளிக்க வேண்டும். நாட்டில் கொரோனா வைரஸ் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. இந்நிலையில் பொதுத் தேர்தலும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்- என்றார். (ஐ)

# ஒன்லைனில் பதிவுசெய்து திணைக்களத்துக்கு வருக!

## ஓய்வூதிய திணைக்களம் கோரிக்கை

ஓய்வூதியத் திணைக்களத்துக்கு வருவோர் திகதி நேரத்தை முன்கூட்டியே நிகழ்நிலை (ஒன்லைன்) முறைமை ஊடாக ஒதுக்கிக் கொள்ளவேண்டும் என ஓய்வூதிய திணைக்களம் ஓய்வூதியம் பெறுநர்களிடம் கோரிக்கை விடுத்துள் ளது.

கொவிட்19 வரைஸ் பரவல் காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்தில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் மாத்திரமே முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. திகதி, நேரம் ஆகியவற்றை ஒதுக்கிக் கொள்வதன் ஊடாக வீண் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என ஓய்வூதியத் திணைக் களம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஓய்வூதியத் திணைக்களத்துடன் 1970 என்ற விசேட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-ரி1)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி பொன்னம்பலநாதன்



சங்கானையை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பொன்னம்பலநாதன் நேற்று (13.06.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சுப்ரமணியம் பொன்னம்பலநாதனின் (ராசா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைராசா பரிபூரணம் தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், டிலானியின் (நீதிமன்றம், சாவகச்சேரி) அன்புத் தாயாரும், குமரவேளின் (யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) அன்பு மாமியாரும், ருஷானியின் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி தரம்-11), அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஸ்ரீதேவி மற்றும் யோகேஸ்வரிதேவி (வவுனியா), ஈஸ்வரிதேவி (வவுனியா), பரமேஸ்வரன் (வவுனியா), சுசீலாதேவி (லண்டன்), காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் பாபு துரையப்பா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருணகிரிநாதன் மற்றும் செந்தில்நாயகம், வடிவானந்தம், பாக்கியலீலா, சர்வேஷ்வரி, அருணேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற சிவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# கொரோனா 1,884

யாழ்ப்பாணம், ஜூன் 14

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 4 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 1,884 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 56 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,252 ஆக உயர்வடைந்துள்ளது. தற்போது 621 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ,5,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழிவுப்பொருட்களை வேறு பிரிக்கும் பொழுது அவற்றை வளங்களாக மாற்றலாம். அதனைக் கற்றறிந்து கொள்ளுங்கள்!

வேள்ட்விஷன் - PHINLA திட்டம்
வத்தளை ஜா-எல மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைகளுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படும் திட்டமாகும்.



**கழிவு முகாமைத்துவம் உங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்**

நீங்கள் வத்தளை, ஜா-எல, மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவராயின் சூழலை பாதுகாப்பதுடன் பொருளாதாரத்தை வளப்படுத்திக்கொள்ள ஒரு சிறந்த சந்தர்ப்பம் வேள்ட்விஷன் நிறுவனத்தின் - PHINLA திட்டம் மூலம் மலர்ந்துள்ளது.

**திட்டத்தின் நோக்கம்**

